විදුලිබල හා බලශක්ති අමාත්‍යාංශය

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு

MINISTRY OF POWER AND ENERGY



වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

வருடாந்த செயற்பாட்டு அறிக்கை

Annual Performance Report

2022

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2022

மின்சக்தி பிரிவு
இல. 437 காலி வீதி,
கொழும்பு 03.
தொலைபேசி இல: - 011 2574922
இணையத்தளம்: - www.powermin.gov.lk

வலுசக்தி பிரிவு
இல. 80, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா
மாவத்தை
கொழும்பு 07
தொலைபேசி இல: 011 2370032/33
இணையத்தளம்: www.energymin.gov.lk

2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு
செலவினத் தலைப்பு இல. 119

பொருடக்கம்

		பக்கம
அத்தியாயம் 01 – நிறுவனத்தின் விபரம்/நிறைவேற்றுப் பொழிப்பு		**01**
1.1	அறிமுகம்	01
1.2	நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்	04
1.3	அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள பணிகள்	05
1.4	நிர்வாகக் கட்டமைப்பு	07
1.5	அமைச்சின் பிரிவுகளின் பிரதான செயற்பாடுகள்	09
1.6	மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்கள்	11
1.7	வெளிநாட்டு நிதியிடல் திட்டங்கள்	13
அத்தியாயம் 02 – எதிர்கால முன்னோட்டம் மற்றும் செயலாற்றுகைகள்		**16**
2.1	மின்சக்தி வலைப்பின்னலின் திறன்	16
2.2	மின்னுற்பத்தி 2022	17
2.3	மின்சாரத்திற்கான கேள்வியும் மற்றும் மின் பாவனையாளர்களின் வளர்ச்சியும்	18
2.4	மின்னுற்பத்தி விரிவாக்கங்கள்	19
2.5	மின் பரிமாற்றல் மற்றும் விநியோக அபிவிருத்திகள்	23
2.6	காலநிலை மாற்ற செயற்பாடுகள்	24
2.7	ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள்	25
2.8	2022 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள்	25
2.9	2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய எரிபொருள் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட கொள்கை நடவடிக்கைகள்	26
2.10	நாட்டின் சக்திவள பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பெற்றோலியத் தொழிற்துறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சீர்திருத்தங்கள்	30
2.11	உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்கள்	34
2.12	பெற்றோலிய இறக்குமதிகள், சுத்திகரித்தல் மற்றும் விற்பனைகளின் முன்னேற்றங்கள்	37
2.13	பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயு ஆய்வு தொடர்பான செயற்பாடுகளின் முன்னேற்றங்கள்	40
2.14	2022 ஆம் ஆண்டில் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	41
2.15	2023 ஆம் ஆண்டிற்கான எதிர்கால திட்டங்கள்/நிகழ்ச்சிகள்	44
அத்தியாயம் 03 – வருடத்திற்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை		**46**
3.1	நிதிச் செயலாற்றுகைகளின் கூற்று	47
3.2	நிதி நிலைமைகளின் கூற்று	48
3.3	காசுப் பாய்ச்சல் கூற்று	49
3.4	வருமான சேகரிப்புக்களின் செயலாற்றுகை	50
3.5	ஒதுக்கீட்டு பயன்பாட்டின் செயலாற்றுகை	50
3.6	நி.பி 208 இன் படி செலவினங்களுக்கான ஒதுக்கீடுகள்	50
3.7	அறிக்கையிடப்பட்ட நிதியல்லாத சொத்துக்களின் செயலாற்றுகை	51
3.8	கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை	51
அத்தியாயம் 04 – செலாற்றுகை சட்டிகள்		**52**
4.1	நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் (செயற்பாட்டு திட்டத்தின் அடிப்படையில்)	52

அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் பெயலாற்றுகை **54**

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 54
5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் சாதனைகள் மற்றும் சவால்கள் 54

அத்தியாயம் 06 – மனித வள விபரம் **56**

6.1 பதவியணி முகாமைத்துவம் 56
6.2 நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு மனித வளத்தினால் ஏற்படும் மிகை அல்லது பற்றாக்குறைகளால் ஏற்படும் தாக்கங்கள் 56
6.3 மனித வள அபிவிருத்திகள் 57

அத்தியாயம் 07 – இணக்க அறிக்கை **59**

அட்டவணை

அட்டவணை 1.1 மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் வெளிநாட்டு நிதியிடல் திட்டங்கள் 13
அட்டவணை 2.1 தேசிய வலைப்பின்னலுடன் சேர்க்கப்பட்ட மொத்த கொள்திறன் (2023 பெப்ரவரி) 16
அட்டவணை 2.2 மின்சார பாவனையாளர்களின் கணக்குகள் 18
அட்டவணை 2.3 கூரை மீது பொருத்தப்படும் சூரியசக்தி மின்கலங்கள் திட்டத்தின் செயற்பாடுகள் (2022 டிசம்பரில் உள்ளவாறு) 20
அட்டவணை 2.4 இந்திய கடன் உதவி திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் விபரங்கள் 27
அட்டவணை 2.5 தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து விவசாய தொழிற்துறைக்கான டீசல் வநியோகம் (2022 - 2023) 28
அட்டவணை 2.6 மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கான டீசல் வழங்கல் 28
அட்டவணை 2.7 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபத்தில் பெற்றோல் மற்றும் டீசலின் தாக்கங்கள் 33
அட்டவணை 2.8 தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறையின் எரிபொருள் நிரப்பு நிலைய பரிமாற்றல் சாராம்சம் 34
அட்டவணை 2.9 வாகனங்களுக்கு வழங்கப்பட்ட தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறையின் முன்னேற்றங்கள் 34
அட்டவணை 2.10 திருகோணமலை எண்ணெய் தாங்கிப் பண்ணையின் அபிவிருத்திகள் 34
அட்டவணை 2.11 தாங்கி திருத்தப்பணிகளின் முன்னேற்றங்கள் (2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு) 37
அட்டவணை 2.12 இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய் (2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை) 37
அட்டவணை 2.13 இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்சுத்திகரித்த பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிகள் (2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை) 38
அட்டவணை 2.14 2022 ஆம் ஆண்டின் சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தின் எரிபொருள் உற்பத்திகள் 37
அட்டவணை 2.15 இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தானசுத்திகரிப்பு நிலையத்தின் எரிபொருள் உற்பத்திகள் (2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை) 39
அட்டவணை 2.16 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாடுபூராகவும் விற்பனை செய்துள்ள பெற்றோலியப் பொருட்கள் - 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை 40

அட்டவணை 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள 52
அட்டவணை 5.1 மின்சக்தி மற்றம் வலுசக்தி அமைச்சின் அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் 54
அட்டவணை 6.1 மின்சக்தி மற்றம் வலுசக்தி அமைச்சின் பதவியணி 56
அட்டவணை 6.2 அமைச்சினால் வழங்கப்பட்ட பயிற்சிநெறிகள் - 2022 57

அட்டவணை

வரைபு 2.1 நிறுவப்பட்ட மொத்தக் கொள்திறன் - 2022 17
வரைபு 2.2 மீள புதுப்பிக்கப்பட்ட கொள்திறன் (MW) 17
வரைபு 2.3 ஏனைய மீள புதுப்பிக்கப்பட்ட சக்தி வளத்தின் (ORE) கொள்திறன் (MW) 17
வரைபு 2.4 மின்னுற்பத்தி கலவை - 2022 17
வரைபு 2.5 ஏனைய மீள புதுப்பிக்கப்பட்ட சக்தி வள உற்பத்தி (GWh) 18
வரைபு 2.6 கூரையின் மேல் உள்ள சூரியசக்தி மின் தகட்டினால் உருவாக்கப்படும் மின்னுற்பத்தி (GWh) 18
வரைபு 2.7 மின்சார பாவனையாளர்களின் கணக்குகள் (2022 டிசம்பரில் உள்ளவாறான) 18
வரைபு 2.8 பெற்றோலியப் பொருட்களின் விற்பனை விலை திருத்தங்கள் 32
வரைபு 2.9 சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் மாதாந்த பிளட் விலைகள் 32

அத்தியாயம் 01
நிறுவனத்தின் விபரம் / நிறைவேற்று சராம்சம்

1.1 அறிமுகம்

நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களால் மக்களின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்ட ஆண்டாக 2022 ஆம் ஆண்டு கருதப்படுகிறது. மேலும் கடந்த இரு ஆண்டுகளில் உலகம் முழுவதும் பரவிய கோவிட் -19 தொற்றுநோயால் பல்வேறு பொருளாதார பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. குறிப்பாக, நாடு எதிர்கொண்டுள்ள அந்நியச் செலாவணி நெருக்கடியினால் மின்சக்தி மற்றும் வலுசக்தி தொழிற்துறை பின்வரும் சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டுள்ளதுடன் இவற்றை நிவர்த்தி செய்வதற்கு அமைச்சு பொருத்தமான மூலோபாயங்களையும் அடையாளம் கண்டுள்ளது.

- 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உலக சந்தையில் பெற்றோலியப் பொருட்களுக்கான விலை உயர்வாகக் காணப்பட்டதுடன் அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதியும் தேய்வடைந்திருந்தது. இதனால், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்யப்படும் பெற்றோலியப் பொருட்களுக்கு அதிக தொகையை செலவிடவேண்டியிருந்தது. மேலும், அந்நியச் செலாவணி நெருக்கடிகள் காரணமாக இறக்குமதி செய்யப்படும் பெற்றோலியப் பொருட்களுக்கான அந்நியச் செலாவணியை உள்ளூர் வங்கிகள் ஊடாக ஏற்பாடு செய்வதென்பது மிகவும் கடினமான விடயமாக காணப்படட்டது.

- அந்நியச் செலாவணி நெருக்கடிகள் காரணமாக இலங்கை கடன் தரப்படுத்தல் வரிசையில் கீழ் நிலைக்கு சென்றுள்ளமை மற்றும் எரிபொருள் வழங்குனர்களுக்கு நீண்ட கால கடன்களை செலுத்தாமை போன்றவற்றால் சர்வதேச ரீதியாகவுள்ள வழங்குனர்கள் எரிபொருளை வழங்குவதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.

- எரிபொருளின் விலையை ஈடுசெய்வதற்காக வருடத்தின் முதல் பாதி வரை செலவினத்தை பிரதிபலிக்கும் வகையிலான விற்பனை விலையை நிர்ணயிக்க இயலாமையின் காரணமாக எரிபொருள் இறக்குமதி மற்றும் பிற சக்தி வள அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான மூலதனத்தை வழங்குவதில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மிகவும் சிரமமான நிலை காணப்பட்டது.

- நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறை காரணமாக, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வரையறுக்கப்பட்ட எரிபொருளை நுகர்வோருக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டதனால் நாடு முழுவதும் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசைகள் ஏற்பட்டுள்ளதுடன் நுகர்வோரும் பல்வேறு பாதிப்புகளை எதிர்நோக்கியிருந்தனர்.

- அந்நியச் செலாவணி நெருக்கடிகள் காரணமாக தொடர்ச்சியாக மின்சார நிலையங்களிற்கு எரிபொருள் மற்றும் நிலக்கரியை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டமை, மின்சார நிலையங்களில் உள்ள மின்பிறப்பாக்கிகள் செயலிழந்தமை மற்றும் நீர்மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்தமை போன்றவற்றால் தொடர்ச்சியாக மின் உற்பத்தி மற்றும் எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்வதில் சில

இடையூறுகள் ஏற்பட்டன. இதனால் நாளொன்றுக்கு 13 மணித்தியாலங்கள் மின்வெட்டை அமுல்படுத்துவதற்கான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அத்துடன், மக்களின் அத்தியாவசிய சக்தி வளங்களில் ஒன்றான மின்சாரத்தை தொடர்ச்சியாக வழங்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதால், உள்நாட்டு நுகர்வோருக்கு பல்வேறு சேவைகளை வழங்கும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உற்பத்தி செயற்பாடுகளுக்கும் பாதகத் தன்மை ஏற்பட்டது.

இவ் நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மக்களை விடுவிக்கும் நோக்கில் அமைச்சு 2022 ஆம் ஆண்டில் பின்வரும் மாற்று மூலோபாயங்களை அமுல்படுத்தியுள்ளது.

- நாட்டிற்கான எரிபொருள் விநியோகத்தை தொடர்ச்சியாக வழங்குவதனை உறுதிசெய்யுமுகமாக, இலங்கை மத்திய வங்கியின் வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகளுக்கான உத்தரவாதத்தின் கீழ் எரிபொருளைக் கொள்வனவு செய்தல், வதிவிடமற்ற ரூபாய் (NRR ESCROW) கணக்கு முறையின் மூலம் பணம் செலுத்துதல் மற்றும் இறக்குமதி செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் தாங்கிகளில் இருந்து எரிபொருளை விடுவிக்கும் (Ex- Storage) போது பணத்தை செலுத்துதல், எரிபொருள் விநியோகத்திற்காக புதிய வழங்குனர்களை பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் மற்றும் அமைச்சர்கள் அமைச்சரவையின் ஒப்புதலின் அடிப்படையில் கோரப்படாத முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர்களிடமிருந்து எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படடுள்ளது.

- அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு தீர்வுகாணுமுகமாக, புகழ்பெற்ற வெளிநாட்டு நிறுவனங்களுக்கு நாட்டின் பெற்றோலிய சந்தையில் உள் நுழைவதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், பெற்றோலியப் பொருட்களுக்கான செலவினங்களை ஈடு செய்யும் வகையில் செலவினத்தை பிரதிபலிபக்கக் கூடிய வகையிலான எரிபொருள் விலையை நிர்ணகிக்கும் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- வரையறுக்கப்பட்ட எரிபொருள் கையிருப்புக்களை நுகர்வோர் மத்தியில் நியாயமான முறையில் விநியோகிப்பதற்காக அமைச்சு, அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் "தேசிய எரிபொருள் அனுமதிப் பத்திர" முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் ஒவ்வொரு வாகனமும் வாராந்தம் உத்தரவாதப்படுத்தப்பட்ட எரிபொருளை பெற்றுக்கொள்வதை உறுதிசெய்கின்றது. அத்துடன், அரச போக்குவரத்து மற்றும் அடையாளம் காணப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களிற்கும் தேவையானளவு எரிபொருளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், பல நாட்களுக்கான குறைந்த பட்ச மொத்த கையிருப்பை பேணுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து மின்சார உற்பத்தி செயற்பாடுகளை வழமைக்கு கொண்டுவரும் நோக்கில், தொடர்ச்சியாக அனல் மின் நிலையங்களை தொழிற்படச் செய்தல் மற்றும் காற்று மற்றும் சூரியசக்தி மின்சார விநியோகங்களை அதிகரிப்பதன் ஊடாக ஆரம்பத்தில் அமுல்படுத்தப்பட்ட பதின்மூன்று (13) மணிநேர மின்வெட்டை 2022 ஆம் ஆண்டின் இறுதியில் இரண்டரை மணித்தியாலங்களாக குறைக்க முடியுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் மின்வெட்டை அமுல்படுத்தாது தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள், மின்சார தொழிற்துறை தொடர்பான பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்துவதை மிக மோசமாக பாதித்துள்ளது. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டிலிருந்து மீள புதுப்பிக்கத்தக்க சக்தி வளத் திட்டங்களை அமுல்படுத்துவதில் அரசாங்கம் சிறப்பு கவனம் செலுத்தியுள்ளது. இதன் விளைவாக, 2030 ஆம் ஆண்டளவில் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி வளத்திலிருந்து மின்சார உற்பத்தியை 70% ஆக அதிகரிப்பதற்கான கொள்கை முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், மின்சார தொழிற்துறை தொடர்பான மின்சார உற்பத்தி திட்டங்களை அமுல்படுத்துதல் உள்ளடங்கலான அபிவிருத்தி திட்டங்களை முறையாக செயற்படுத்துவதற்குத் தேவையான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளையும் அமைச்சு முன்னெடுத்துள்ளது.

- 2022 ஆம் ஆண்டில் ப்ராட்லேண்ட் நீர் மின் நிலையம் நிர்மாணிக்கப்பட்டு தேசிய வலையமைப்புடன் இணைக்கப்பட்டு மக்களின் மின்சாரத் தேவைகளை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. மேலும், மன்னாரில் காற்றாலை மின்சார நிலையத்தை தாபித்து அதனை செயற்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி வளத்தின் பங்களிப்புகள் அதிகரிக்கப்படும்.

- பெற்றோலியத் தொழிற்துறை தொடர்பான ஆய்வு மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையின் செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டு வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டதுடன் அது தொடர்பான ஒழுங்குபடுத்தல்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படடுள்ளன.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களான, இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார தனியார் கம்பனி (LECO), இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகார சபை (SLSEA), இலங்கை அணுசக்தி ஒழுங்கமைப்புப் பேரவை, எல்டீஎல் ஹோல்டிங்ஸ் நிறுவனம், வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கா எனர்ஜீஸ் கம்பனி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம், இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வரையறுக்கப்பட்ட திருகோணமலை பெற்றோலிய முனையம் (TPTL) போன்றன அமைச்சுக்கு தங்களது சிறந்த பங்களிப்பையும் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளையும் வழங்கியிருந்தன.

நாட்டின் மின்சக்தி மற்றும் வலுசக்தி தொழிற்துறைகளின் பிரச்சினைகள் மற்றும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள சக்தி வள நெருக்கடிகளை தீர்ப்பதற்கும் அமைச்சின் ஒவ்வொரு பிரிவும் சிறந்த அர்ப்பணிப்பு மிகுந்த சேவையை வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன், 2022 ஆம் ஆண்டில் நாட்டின் சமூக மற்றும் பொருளாதாரத்திற்கு அத்தியாவசியமான மின்சாரம் மற்றும் வலுசக்தியை வழங்குவதற்கான வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்களை இவ் அறிக்கை மிகத் தெளிவான சுட்டிக்காட்டுகின்றது.

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு,பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள் வலுசக்தி அமைச்சு

மின்சக்தி பிரிவு

தொலைநோக்கு

நிலைபேறான முறையில் அபிவிருத்தி செய்யப்பட்ட இலங்கை

பணிக்கூற்று

தேசிய பொருளாதார சுபீட்சத்திற்காக தரமான, நம்பகமான, நிலைபேறான விலையைத் தாங்கக் கூடியவாறான மின்சார வழங்கலொன்றை உறுதி செய்தல்.

வலுசக்தி பிரிவு

தொலைநோக்கு

''இலங்கையை ஆசியாவின் சக்திவலு கேந்திரமாக மாற்றுதல"

பணிக்கூற்று

''பொருத்தமான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை அமுல்படுத்துவதன் ஊடாக சக்தி வளம் தொடர்பான கொள்கைகளை ஒழுங்கமைத்து சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்காத நிலைபேறான சக்தி வழங்கலை உறுதிப்படுத்துதல் மற்றும் புதிய உள்நாட்டு சக்தி வளங்களை முன்பிருந்த சக்தி வளத்துடன் ஒருங்கிணைத்தல் மற்றும் இறக்குமதிகளை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்தல் போன்றவற்றின் மூலம் குறைந்த விலையில் சக்தி வளங்களை கிடைக்கக்கூடிய வழிகளை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டின் சக்தி வளத் தேவையினை பூர்த்திசெய்தல்''

பணிக்கூற்று

- 2030ஆம் ஆண்டிற்குள் மீள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் 70% மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்
- மீள புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் அதிகபட்ச சாத்தியமான அபிவிருத்தியுடன் 2025 ஆம் ஆண்டுடிற்குள் நாட்டின் மின்சார உற்பத்தித் திறனை தற்போதுள்ள 4,809 மெகாவாட்டிலிருந்து 7,629 மெகாவாட்டாக உயர்த்துதல்
- பரிமாற்றல் வலைப்பின்னலை விருத்தி செய்தல்
  2025 ஆம் ஆண்டிற்குள் 799 கிமீ முதல் 1,300 கிமீ வரையான 220 kV வலைப்பின்னல்
  2025 ஆம் ஆண்டிற்குள் 2,361 கிமீ முதல் 3,000 கிமீ வரையான 132 kV வலைப்பின்னல்
- தரமான சேவையை வழங்குதற்கும் மற்றும் 100% வீடுகளுக்கு மின்சாரத்தை வழங்குவதற்குமான வலைப்பின்னலை விருத்தி செய்தல்
- 2025 ஆம் ஆண்டிற்குள் தொழில்நுட்ப மற்றும் வணிக முறையின் இழப்புகளை 9% இலிருந்து 8% ஆக குறைத்தல்
- உள்நாட்டில் மின்சார உபகரணங்களை உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் மின்சார அமைப்பை தன்னியக்க வலைப்பின்னலாக (smart grid) ஆக மாற்றுதல்
- எரிபொருள் வழங்கற் சங்கிலி ஊடாக அதன் தரத்தினையும் நம்பகத் தன்மையினையும் உறுதிப்படுத்துதல்.
- பெற்றோலியப் பொருட்களை வினைத்திறனுடனும் செயற்திறனுடனும் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
- எரிபொருளை வினைத்திறனுடனும் செயற்திறனுடனும் பாதுகாப்பபான முறையில் களஞ்சியப்படுத்துவதினை உறுதி செய்வதோடு அதனை நாட்டிற்கு விநியோகித்தல்.
- 2050ஆம் ஆண்டாகும் போது காபன் அற்ற நாடாக பங்களிப்பு வழங்கும் முன்னணி நாடாக இலங்கையை மாற்றுதல்
- 2023ஆம் ஆண்டாகும் போது டீசல் மற்றும் பெற்றோலியத் தரங்களை EURO VI நியமத் தரங்களுக்கு தரமுயர்த்துதல்
- 2030ஆம் ஆண்டாகும் போது உள்நாட்டு எண்ணெய் மற்றும் இயற்கை வாயு உற்பத்தியை உச்சப்படுத்தி இலங்கையை சக்தி வளத் துறையில் தன்னிறைவடைந்த நாடாக மாற்றுதல்.
- இயற்கை வாயுவுக்கான தேசியக் கொள்கையை அமுல்படுத்துதல்
- 2026ஆம் ஆண்டாகும் போது சுயமான செய்முறையின் ஊடாக நாட்டின் பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வியை பூர்த்தி செய்தல்.

1.3 அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள பணிகள்

- மின்சக்தி மற்றும் வலுசக்தி விடயத்துடனும் மற்றும் அரசினால் அமுல்படுத்தப்படும் தேசிய கொள்கை அடிப்படையில் இவ் அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் மின்சக்தி மற்றும் வலுசக்தி விடயங்களில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை வகுத்தமைத்தல், செயற்படுத்துதல், தொடராய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

- இவ் அமைச்சின் கீழ் வரும் அரச சேவைகளை வினைத்திறனுடனும் சினேக பூர்வமாகவும் பொதுமக்களுக்கு வழங்குதல்

- நவீன முகாமைத்துவம் பொறிமுறைகள் மற்றும்தொழிநுட்பங்களை உபயோகித்து அனைத்து ஒழுங்குபடுத்தல்கள் மற்றும் செயற்பாடுகளை மறுசீரமைத்து, ஊழல் மற்றும் வீண்விரயத்தை ஒழித்து அமைச்சின் அனைத்து செயற்பாடுகளையும் வழங்குவதனை உறுதிசெய்தல்

- மீள புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் உற்பத்திகள் மற்றும் ஏனைய சக்தி வளங்கலான சூரியசக்தி, நீர், அனல், நிலக்கரி, கழிவுப்பொருட்கள் மற்றும் காற்று வலுவினால் பெற்றுக்கொள்ளப்படும் மின்சாரம் தொடர்பான செயற்பாடுகளை ஆய்வுசெய்தல், திட்டமிடல், அபிவிருத்திசெய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்

- இலங்கையின் மின்சார தேவைகளை பூர்த்திசெய்தல் மற்றும் கச்திவளப் பாதுகாப்பை பேணுதல்

- வலுசக்தி திறனை உறுதிசெய்யுமுகமாக அதற்கான கேள்வியினை முகாமைத்துவம் செய்தல்

- நீண்டகால் தேவைகளின் அடிப்படையில் மின்சக்தி உற்பத்திக்கான திட்டங்களை அமுல்படுத்துதல்

- மின்சக்தி பரிமாற்றல் மற்றும் விநியோக செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்ளுதல்

- உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை வினைத்திறனுடன் உபயோகப்படுத்துவதை உறுதிசெய்யுமுகமாக கணினி மயப்படுத்தப்பட்ட வலைப்பின்னலை (smart network) உபயோகித்தல்

- மின்சார உற்பத்திக்கான செலவினங்களை குறைத்தல் மற்றும் மின்சார உற்பத்திகளின் போது எழும் நிச்சயமற்ற தன்மைகளை அகற்றுதல்

- பச்சை வீட்டு வாயு வெளியேற்றங்களை கட்டுப்படுத்துதல்

- கிராமிய ரீதியாக மின்சாரத்தினை வழங்குதல்

- பெற்றோலியம் சார்ந்த உற்பத்திகள் மற்றும் இயற்கை வாயு போன்றவற்றை இறக்குமதி செய்தல், சுத்திகரிப்பு செய்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகம் செய்தல், மற்றும் விற்பனை செய்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல் மற்றும் அமுல்படுத்துதல்

- பெற்றோலிய உற்பத்தி மற்றும் சத்திகரிப்பு

- பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயுவின் ஆய்வுகள் மற்றும் இவை தொடர்பான விடயங்கள்

- வாயுவை உற்பத்தி செய்தல் மற்றும் பெற்றோலியப் உற்பத்தி மூலங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் பக்க உற்பத்திப் பொருட்களை (by-product) களஞ்சியப்படுத்தல், இருப்பை பராமரித்தல், உற்பத்தி செய்தல் மற்றும் விநியோகித்தல்.

- எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்

- சக்தி வளத்திற்கான ஒழுங்குபடுத்தல் மற்றும் பயன்பாடுகள் மற்றும் இதனை கட்டுப்படுத்துவதற்கான பொருத்தமான சக்திவளக் கொள்கைகளை உருவாக்குதல்

- மீள புதுப்பிக்கத்தக்க சக்திவளங்களின் அபிவிருத்திகள்

- வீட்டுத்துறை, காரியாலயம் மற்றும் தொழிற்சாலைகளில் குறைந்த செலவில் சக்தி வளங்கலை கிடைப்பதனை உறுதிசெய்யும் பொருட்டு சூரியக்தி முறைமைகள் மற்றும் சூரியசக்தி மின்கலங்களை உபயோகப்படுத்துவதை ஊக்குவித்தல்


- மீள புதுப்பிக்கத்தக்க சக்திவளத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு தனியார் துறையினரையும் மற்றும் முயற்சியாளர்களையும் ஊக்குவித்தல்

- தொழிற்சாலைக் கழிவுகளிளை உபயோகித்து மின்சாரத்தினை உற்பத்திசெய்தலை அதிகரித்தல்


- இவ் அமைச்சின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் மேற்பார்வை செய்தல்

- இவ் அமைச்சின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்களையும் மேற்பார்வை செய்தல்.

1.4 நிர்வாகக் கட்டமைப்பு (மின்சக்தி பிரிவு)



(வலுசக்தி பிரிவு)


கௌரவ.அமைச்சர்
கௌரவ. இராஜாங்க அமைச்சர்வநச
கௌரவ. இராஜாங்க அமைச்சர்வநச
செயலாளர்
மேலதிகச் செயலாளர் (நிர்வாகம்) 01
மேலதிகச் செயலாளர் (பெறுகை) 01
மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) 01
பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) 01
பிரதான நிதியிய-லாளர் 01
சிரேஸ்ட உதவிச் செயலாளர் (நிர்வாகம்) 01
பணிப்பாளர் (பெறுகை) 01
சிரேஸ்ட உதவிச் செயலாளர் (அபிவிருத்தி.) 01
பிரதான பொறியியலாளர் 01
னுசைநஉவழச (டீயசெபை) 01
பணிப்பாளர் (திட்டமிடல்) 01
பிரதான கணக்காளர் 01
உதவிச் செயலாளர் (நிர்வாகம்) 01
சட்ட அலுவலர் 02
பிரதி /உதவி பணிப்பாளர் (பெறுகை) 01
உதவிச் செயலாளர் (அபிவிருத்தி) 01
பிரதி /உதவி பணிப்பாளர் (திட்டமிடல்) 01
கணக்காளர் 01
நிர்வாக உத்தியோகத்தர் 01
மொழிபெயர்ப்பாளர் 01
ஒருங்கிணைப்புச் செயலாளர். 01
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் 24
அபிவிருத்தி உதவியாளர் / அபிவிருத்தி உத்தியோகத்தர் 20
தகவல் தொழிநுட்ப உதவியாளர் 02
நிழற் பட பிடிப்பாளர் 01
ஒளிப்படப் பிடிப்பாளர் 01
அலுவலக உதவியாளர் சேவை 11
சாரதி 11
நிழற் பட பிடிப்பு உதவியாளர் 01

1.5 அமைச்சின் பிரிவுகளின் பிரதான செயற்பாடுகள்

❑ நிர்வாகப் பிரிவு

- அமைச்சின் அனைத்து நிர்வாக செயற்பாடுகளையும் மேற்கொள்ளல்
- அமைச்சின் உத்தியோகத்தர்களின் பெயர்வழிக்கோவையை முறையாக பராமரித்தல்
- மனித வள அபிவிருத்தி
- பாராளுமன்ற வினாக்களுக்கான பதில்களை தயாரித்தல்
- பொதுமக்கள் முறைப்பாட்டு குழு, மின்சக்தி மற்றும் வலுசக்தி தொடர்பான ஆலோசனைக் குழு மற்றும் அரச முயற்சிகள் குழு ஆகியவற்றின் பாராளுமன்ற குழு செயற்பாடுகள்
- அமைச்சின் கீழ் வரும் அனைத்து நியதிச் சபைகளுக்குமான நிர்வாக வழிகாட்டுதல்களை வழங்குதல்

❑ அபிவிருத்திப் பிரிவு

- கீழ்நிலை மற்றும் மேல் நிலை பெற்றோலியத் தொழிற்துறை தொடர்பான அபிவிருத்திக் கொள்கைத் தீர்மானங்களை உருவாக்கலும் நடைமுறைப்படுத்தலும்
- எண்ணெய், இயற்கைவாயு ஆய்வுகள் மற்றும் உற்பத்திகள் தொடர்பான அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல்
- பெற்றோலியத் தொழிற்துறை தொடர்பான அபிவிருத்தி மற்றும் ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்
- பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் விலை நிர்ணயித்தல், எரிபொருள் மானியங்களை வழங்குதல், விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் விடயங்கள் தொடர்பான பிரச்சினைகள் சம்பந்தமாக, நிதி அமைச்சு மற்றும் பொருத்தமான அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை பேணுதல்.
- இலங்கையில் கப்பல் எரிபொருள் வியாபாரம் மற்றும் உராய்வு நிக்கி எண்ணெய் வியாபாரம் என்பவற்றில் ஈடுபடும் ஆற்றல் உள்ள தரப்பினருக்கு அனுமதிப்பத்திரத்தினை வழங்கல்/ அனுமதிப்பத்திரத்தினைப் புதுப்பித்தல் மற்றும் வேறு ஏதேனும் விசேடமான பெற்றோலிய உற்பத்தியினை இறக்குமதி செய்வதற்கு தனியார்துறையினருக்கு அனுமதி வழங்கல்
- மீள புதுப்பிக்கத்தக்க சக்திவள அபிவிருத்தி செயற்பாடுகள்

❑ கொள்கை, தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சி பிரிவு

- தேசிய எரிசக்தி கொள்கை மற்றும் மூலோபாயங்களை தயாரித்தல், செயற்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல்
- இலங்கை மின்சாரச் சட்டத்தின் விதிகளை திருத்துதல் மற்றும் ஒழுங்குமுறைகளை அமுல்படுத்துதல், கொள்கை வழிகாட்டுதல்களை வழங்குதல், மின்சாரக் கட்டணங்களை தயாரித்தல் மற்றும் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் போன்றவற்றில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுடன் (PUCSL) இணைந்து செயற்படுதல்
- மின்சார உற்பத்தி, பரிமாற்றம், அபிவிருத்தி மற்றும் சக்தி வள பாதுகாப்பு மற்றும் கேள்வி பக்க முகாமைத்துவம் தொடர்பான அனைத்து தொழில்நுட்ப செயல்பாடுகள் மற்றும் மின்சார செயலிழப்பு, பரிமாற்றல் மற்றும் விநியோக காலாவதியாகுதல் ஆகியவற்றைத் தடுப்பது தொடர்பான விடயங்கள்
- மின்சார நிலையங்களின் உற்பத்தி மற்றும் செயற்பாடுகளை கண்காணித்தல்
- அணுசக்தி ஒழுங்கமைப்புப் பேரவை(AERC) மற்றும் (அணுசக்தி சபையால் (AEC) அமுல்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்தல்
- மின்சாரச் சட்டம் தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை இயற்றுதல்.
- உலக எரிசக்தி பேரவை தொடர்பான செயற்பாடுகள்

- புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கான ஒருங்கிணைப்பு மற்றும் தேவையான அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகியவை அமைச்சின் நோக்கத்தின் கீழ் வருகிறது

❑ **உற்பத்தி, பரிமாற்றல் மற்றும் விநியோக பிரிவு**

- பெரிய மற்றும் நடுத்தர அளவிலான மின் உற்பத்தி திட்டங்கள் மற்றும் மின் உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகம் தொடர்பான அனைத்து விடயங்களையும் செயற்படுத்துதல்
- சுற்றாடலுக்கு சிநேகபூர்வமான எரிபொருளாக இலங்கை மின்சார தொழிற்துறைக்கு திரவ இயற்கை வாயுவை (LNG) அறிமுகம் செய்தல்
- அனல் மின்சார நிலையத் திட்டங்கள் மற்றும் மீள புதுப்பிக்கத்தக்க மினசார திட்டங்களுகான ஒப்புதல், அமுல்படுத்துதல் மற்றும் நிலங்களை கையகப்படுத்துதல்
- நிதியை பெற்றுக்கொள்வதற்கு வெளிநாட்டு வள திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பை பேணுதல்

❑ **திட்டமிடல் பிரிவு**

- திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் மற்றும் இதனை அமுல்படுத்துவதற்கத் தேவையான ஒப்புதலைப் பெற்றுக்கொள்ளல் (தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் அமைச்சரவை அமைச்சர்களிடமிருந்து)
- செயற்திட்ட அறிக்கை மற்றும் வருடாந்த வரவு செலவுத்திட்டத்திற்காக வருடாந்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கையை தயாரித்தல்
- அபிவிருத்தி திட்டங்களுக்கான வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தை தயாரித்தல்
- திட்டத்தின் செயற்பாடுகளை கண்காணித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் மற்றும் இதற்கான அறிக்கையினை தயாரித்தல்
- மின்சக்தி தொழிற்துறையின் தேசியளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்கிற்கு பொருத்தமான செயற்பாடுகளை அமுல்படுத்துதல்
- ஜனாதிபதி செயலகம், பிரதம மந்திரி அலுவலகம், வரிசை அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரி போன்றவற்றினால் வேண்டுதல்களுக்கேற்ப பல்வேறு அறிக்கை மற்றும் திட்டங்களை தயாரித்தல்

❑ **பெறுகைப் பிரிவு**

- அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட விசேட நிலையான பெறுகைக் குழுவின் (SSCAPC) செயற்பாடுகளை பெற்றுக்கொள்ளல்.
- இவ் அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களின் பெறுகைச் செயற்பாடுகளுக்காக பல்வேறு வகையான பெறுகைக் குழுக்களை நியமிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
- நிதி அமைச்சின் அனைத்து பெறுகைச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்தல்.
- அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்களின் பெறுகைச் செயற்பாடுகளை கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்வதோடு பெறுகைச் செயற்பாடுகள் தொடர்பான மிகச் சரியான அறிவுறுத்தல்கள் தேவைப்படும் போது அவற்றை வழங்குதல்.
- பெறுகைச் செயற்பாடுகளுக்கு அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதல்கள் தேவைப்படும் போது அச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

❑ **நிதிப் பிரிவு**

- குறித்த ஆண்டில் பாராளுமன்றத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பிரகாரம் வரவுசெலவு ஒதுக்கீட்டு பிரமாணங்களுக்கிணங்க அமைச்சின் அனைத்துச் செலவினங்களையும் மேற்கொள்ளுதல்.
- கௌரவ அமைச்சரின் பணிக்குழு மற்றும் அமைச்சின் பணிக் குழு என்பவற்றின் சம்பளத்தினை தயாரித்தல், கொடுப்பனவு செய்தல் மற்றும் சம்பளம்

தொடர்பான ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

- கௌரவ அமைச்சர்களின் பணிக் குழு மற்றும் அமைச்சிற்கு தேவையான அனைத்து பண்டங்கள், காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்களை பெற்றுக்கொள்ளல் மற்றும் பிரிவுகளின் தேவைக்கேற்ப அவற்றினைப் பகிர்ந்தளித்தல்.
- அமைச்சின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கை உரிய முறையில் பேணுதல் மற்றும் செயற்படுத்துதல்.
- வரும் நிதியாண்டுக்கு அமைச்சுக்கு அவசியமான செலவின ஒதுக்கீட்டினை கணிப்பிடுதல் மூலம் வரவுசெலவு மதிப்பீட்டினைத் தயாரித்தல்
- அரசின் வருமானமாக அமைச்சுக்கு கிடைக்கும் தொகை மற்றும் அமைச்சு நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ளும் செலவுகளை அனுமதிக்கப்பட்ட முறையில் பேரேடுகளை வகைப்படுத்தல் மற்றும் அது தொடர்பான அறிக்கைகளை பேணுதல்.
- வருடந்தோறும் அமைச்சின் கொடுக்கல் வாங்கல்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பகிர்வுக் கணக்கினைத் தயாரித்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.

❑ **உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு**

- முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் படி அமைச்சின் கணக்காய்வு திட்டங்களை தயாரித்தல் மற்றும் செயற்படுத்துதல்
- அமைச்சின் செயலாளரின் கட்டளைப்படி விசேட ஆய்வு மற்றும் விசாரணைகளை மேற்கொள்ளல்.
- ஆமைச்சின் கீழ் நிறுவனங்களின் உள்ளக கணக்காய்வுப் பிரிவுகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்து குழுக் கூட்டங்களை நடாத்துதல்.

1.6 மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் கீழ் வரும் நிறுவனங்கள்

இலங்கை மின்சார சபை: 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டது. மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும், அவற்றை செலுத்துவதற்கும், சகல வகுதி நுகர்வோர்களுக்கும் மின்சாரத்தை பகிர்ந்தளிப்பதற்கும், மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் (PUCSL) மூலம் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்திற்கு அமைய வருமானத்தைச் சேகரித்தல், ஆகியனவற்றிற்கு இலங்கை மின்சார சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது

வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார தனியார் கம்பனி (LECO): 54.84 சதவீத பங்குரிமையைக் கொண்டுள்ள இலங்கை மின்சார சபையின் துணை நிறுவனங்களுள் ஒன்றாக இக் கம்பனி விளங்குவதோடு, திறைசேரியின் சிறுபான்மை பங்குரிமை 43.56 சதவீதமும், நகர அபிவிருத்தி அதிகார சபையின் 0.79 சதவீத பங்குரிமையையும், மற்றும் உள்ளூராட்சி சபையின் 0.81 சதவீத பங்குரிமையையும் கொண்டுள்ளது

இலங்கை மின்சார சபையின் துணை நிறுவனமான எல்டீஎல் நிறுவனத்தில் இலங்கை மின்சார சபை 63 சதவீத பங்குரிமையையும் மற்றும் அதன் ஊழியர்கள் 37 சதவீத சிறுபான்மை பங்குரிமையையும் கொண்டுள்ளது

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை (SLSEA): 2007 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது

இலங்கை அணுசக்தி சபை: இலங்கை அணுசக்தி சபையானது 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலங்கை அணுசக்தி சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது.

இலங்கை அணுசக்தி ஒழுங்கமைப்புப் பேரவை: இலங்கை அணுசக்தி ஒழுங்கமைப்புப் பேரவையானது, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலங்கை அணுசக்தி பேரவைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது.

வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி கம்பனி: இக்கம்பனி 60 சதவீத பங்குரிமையுடன் இலங்கை மின்சார சபையின் துணைக் கம்பனியாக விளங்குவதோடு, திறைசேரி 20 சதவீத சிறுபான்மை பங்குரிமையையும், மற்றும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் 10 சதவீத பங்குரிமையையும் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபை 10 சதவீத பங்குரிமையையும் கொண்டுள்ளது

எனர்ஜீஸ் கம்பனி : இக்கம்பனி 100 சதவீத பங்குரிமையைக் கொண்ட இலங்கை மின்சார சபையின் துணை நிறுவனமாகும்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், 1961 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது

இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம், 1982 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதுடன் எரிபொருள் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோக செயற்பாடுகளுக்கான பொது வழங்குனராக உள்ளது.

இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை, 2021 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட திருகோணமலை பெற்றோலிய முனையம், 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது.

1.7 வெளிநாட்டு நிதியிடல் திட்டங்கள்

அட்டவணை 1.1
மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் வெளிநாட்டு நிதியிடல் திட்டங்கள்

இல	கருத்திட்டத்தின் பெயர்	நிதி நிறுவனம்	மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் (ரூ.மில்லியன்)	கருத்திட்டதின் காலம்	2022 ஆம் ஆண்டு முன்னேற்றம்	
					நிதி ரீதியாக	பௌதீக ரீதியாக
மின்சார உற்பத்தி நிலைய கருத்திட்டங்கள்						
1	31 மெகாவாட் நிர்மாணம் (மொரகொல்ல நீர்மின் திட்டம்)	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	18,553	2018-2023	32%	45%
2	ப்ராட்லாண்ட் (Broadlands)இல் 35 மெகாவாட் நீர் மின் நிலையம்	முன்பு சீனா	9,424	2013-2022 (பூர்த்திசெய்யப்பட்டுள்ளது)	100%	100%
3	120 மெகாவாட் உமா ஓயா நீர் மின் நிலையம்	ஈரான்	USD 530 மில்லியன்	2010-2023	நீர்ப்பாசன அமைச்சால்	99%
பரிமாற்றல் மற்றும் விநியோக கருத்திட்டங்கள்						
4	புதிய பொல்பிட்டிய-அம்பாந்தோட்டையில் 220kV திறன் கொண்ட 150கி.மீ பரிமாற்றல் பாதையின் நிர்மாணம்	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	5,794	2018-2023	85%	95%
5	ஹொரண- பாதுக்கவில் 132 kV திறன் கொண்ட 25 கி.மீ நீளமான பரிமாற்றல் பாதை நிர்மாணம்	பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனம் (AFD)	592	2020-2023	33%	43%
6	கொழும்பு B GSS இன் நிருமாணம், கொழும்பு C - கொலன்னாவ 132kV 800 sqmm கம்பி வடத்தின் தனித்த உள் - வெளி இணைப்பு, கொழும்பு C மற்றும் கொலன்னாவ GSS இன் விருத்தியாக்கம	பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனம் (AFD)	929	2019-2022	85%	97%
7	கொட்டுகொட, கொலன்னாவ, பாதுக்க, ஹொரணை, தெஹிவளை மற்றும் மாதம்பே GSS இன் விருத்தியாக்கம்	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	2,214	2018-2022	88%	99%
8	பியகம 220/33kV GSS இன் நிர்மாணம் மற்றும் பியகம மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம்	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	1,540	2018-2022 (2022 ஜனவரி இல் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது)	89%	100%

9	அம்பலாங்கொடை 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம், பன்னல 132/33kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம் மற்றும் இரண்டு 132/33 kV 31.5 MVA உதிரிப்பாக மின்மாற்றிகளின் வழங்கல்	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	1,739	2022-2024	10%	16%
10	பன்னிப்பிட்டிய மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் 100 Mvar BSC இன் நிர்மாணம். பியகம - மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் நிலைத்த பட்டை முறைமையின் (SVS) நிர்மாணம்.	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	2,699	2019-2023	84%	71%
11	கொழும்பு நகர மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் 124 Mvar தடுப்பு ஆளியிட்ட கொள்ளளவி வங்கிகளின் நிறுவல் மற்றும் துல்கிரிய மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் துண்டிக்கப்பட்ட தடுப்பு ஆளியிட்ட கொள்ளளவி வங்கிகளை மாற்றுதல்	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	1,763	2022-2023	10%	ஆரம்பிக்கப்படல் வேண்டும்
12	கெரவலப்பிட்டியில் 220 kV ஆளியிடல் நிலையம்.	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	2,910	2020-2023	25%	42%
13	33 kV விநியோக கோபுர பாதைகள் (பொதி 4) எத்துல்கோட்டே மற்றும் பெலிகஹாவில் தற்போதுள்ள 33/11 kV முதன்மை துணை மின் நிலையங்களின் எண்ணிக்கையை 02 ஆக அதிகரிப்பது. இரத்தினபிட்டியவில் ஒரு (01). புதிய 2x 10 MVA 33/11 kV முதன்மை துணை மின்நிலையத்தின் கட்டுமானம். (பொதி 5)	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)+ பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனம் (AFD)	4,146 (P4: 2,736 P5: 1,440)	2019-2023	P4 (81%) P5 (72%)	P4 (100%) P5 (55%)
14	300 kVA சிறிய வலையமைப்பு முன்னோடித் திட்டம் -LECO	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	277	2019 – 2022 (பூர்த்திசெய்யப்பட்டுள்ளது)	100%	100%

15	மின்சாரம் வழங்கல் நம்பகத்தன்மையை விருத்தி செய்யும் திட்டம் 300 கிமீ நீளமுள்ள 33kV கோபுர பாதைகள் மற்றும் பதின்மூன்று (123) 33kV மாறுதல் கையாளுகைகள் நிர்மாணம்	ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)	6,782	2019 - 2022	36%	44%
16	ஹபரணை - வியாங்கொடை220kV மின் செலுத்துகை பாதை புதிய ஹபரளை உப-மின்நிலைய வலையமைப்பு நிர்மாணம் புதிய ஹபரணை - வியாங்கொடை வரையான 220 kV கொண்ட 146 கி.மீ நீளமுள்ள பரிமாற்றல் பாதை நிர்மாணம்	ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம (JICA)	10,757	2018 – 2022 (2021 மே இல் 2 சுற்று பாதை பூர்த்திசெய்ய ப்பட்டுள்ளது).	85%	99%
17	புதிய ஹபரணை 220/132/33 kV வலையமைப்பு துணை மின்நிலையத்தின் நிர்மாணம்	ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம (JICA)	4,190	2018-2022	100%	100%
18	தேசிய பரிமாற்றல் மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் திறன் மேம்பாட்டு திட்டம் பொதி 1 – பரிமாற்றல் பாதை பொதி 2 – வலையமைப்பு உப மின்னிலையம் பொதி 3 – பரிமாற்றல் பாதை பொதி 4 – விநியோக் பாதை	ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம (JICA)	29,521 (P1:4780, P2:8826, P3:11,321, P4:4594)	2019 - 2023	P1 (22%) P2 (76%) P3 (72%) P4 (55%)	P1 (60%) P2 (68%) P3 (58%) P4 (41%)

அத்தியாயம் 02

எதிர்கால முன்னோட்டம் மற்றும் செயலாற்றுகைகள்

மின்சக்தி பிரிவு

2.1 மின்சக்தி வலைப்பின்னலின் திறன்

தேசிய மின் தொகுப்பின் பொருத்தப்பட்ட தற்போதைய மொத்தக் கொள்திறன் 4,809 மெகாவாட் ஆக உள்ளதோடு, இது 62 சதவீத மீளப்புதுப்பிக்கத்தக்க வலு சக்தி மூலங்களையும் 38 சதவீத புதைபடிவ எரிபொருள்களையும் உள்ளடக்கியுள்ளது. மொத்த புதை படிவ எரிபொருளின் மொத்தப் பங்கில் நிலக்கரி 19 சதவீதத்தையும், 19 சதவீதம் எரிபொருள் எண்ணெய்யையும் உள்ளடக்கியுள்ளது. கொள்திறன் கலவையில் மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தியின் பிரதான மூலமாக பிரதான நீர்மின்சக்தி விளங்குவதோடு, அது 30 சதவீத பங்கைக் கொண்டுள்ளது. காற்று, சூரிய மின்சக்தி (நிலத்தில் பொருத்தப்பட்ட மற்றும் கூரையில் பொருத்தப்பட்ட சூரிய மின் தகட்டுப் பொறிகள்), சிறிய நீர், உயிர் துணிக்கைகள் மற்றும் மாநகர சபை திண்மக் கழிவுகள் என்பனவும் மின்னுற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுவதோடு, மின்கலவையின் கொள்திறனில் 32 சதவீத பங்கைக் கொண்டுள்ளது.


2022 ஜனவாரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலங்களின் மூலம் தேசிய மின்தொகுப்புக்கு 259 மெகாவாட் கொள்திறன் சேர்க்கப்பட்டுள்ளது. கூரை மீது பொருத்தப்பட்ட 12,179 சூரிய மின் பொறிகளின் மூலம் 223 மெகாவாட் மெவோ கொள்திறன் சேர்க்கப்பட்டுள்ளது. 28 நிலத்தின் மீது பொருத்தப்பட்ட சூரிய மின் பொறிகளின் நிறைவுக்குப் பின்பு தேசிய மின் தொகுப்புக்கு 32 மெகாவாட் சேர்க்கப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1
தேசிய வலைப்பின்னலுடன் சேர்க்கப்பட்ட மொத்த கொள்திறன் (2023 – பெப்ரவரி)

சக்தி வளம்		கொள்திறன் (MW) (2021–பெப்ரவரி)	கொள்திறன் (MW) (2021–டிசம்பர்)	%	மின்சார நிலையங்களின் எண்ணிக்கை
அனல் மின்சாரம்	உலை எண்ணெய் (CEB)	654	604	14%	9
	உலை எண்ணெய் (IPP)	270	457	5%	1
	நிலக்கரி	900	900	19%	1
மொத்த அனல் மின்சாரம்		**1,824**	**1 961**	**38%**	**11**
மீள புதுப்பிக்கத்தக்க மின்சாரம்	பிரதான நீர் மின்சக்தி	1,413	1,383	30%	18
ஏனைய மீள புதுப்பிக்கத்தக்க சக்தி வளம் (ORE)	சிறிய நீர் மின்சக்தி	429	429	9%	214
	காற்று	248	248	5%	18
	சூரிய சக்தி (GM)	132	96	3%	81
	டென்றோ மற்றும் உயிரில் வாயு	52.6	43.5	1%	14
	மாநகர திண்மக் கழிவு (WTE)	10	10	0.2%	1
	கூரையின் மேல் பொருத்தப்படும் சூரிய மின்சக்தி	700	439	14%	
ORE மொத்தம்		**1,572**	**1,267.5**	**32%**	**328**
மொத்த மீள புதுப்பிக்கத்தக்க மின்சாரம்		**2,985**	**2,650.5**	**62%**	**346**
வலையமைப்புடன் இணைக்கப்பட்ட மொத்த திறன்		**4,809**	**4,611.5**	**100%**	**357**


மூலம்: CEB, LECO, SLSEA

வரைபு 2.1
பொருத்தப்பட்ட மொத்தக் கொள்திறன் – 2022




மூலம்: CEB, SLSEA

வரைபு 2.2
மீள புதுப்பிக்கப்பட்ட சக்தி வள கொள்திறன்



மூலம்: CEB. LECO, SLSEA

வரைபு 2.3
ஏனைய மீள புதுப்பிக்கப்பட்ட சக்தி வளத்தின் கொள்திறன்




மூலம்: CEB, SLSEA

கடந்த ஐந்து வருடங்களில், பல புதிய வலுசக்தி இயந்திரங்கள் இவ் முறைமையுடன் இணைக்கப்பட்டதால் தேசிய வலைப்பின்னலுக்கான மீளப்புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கலின் திறன் அதிகரித்துள்ளது.

2.2 மின்னுற்பத்தி 2022

2022 ஜனவரி மாதத்திலிருந்து டிசம்பர் வரையிலான நிகர மின்னுற்பத்தி 15,845 GWh ஆகும். 2022 ஆம் ஆண்டில் மொத்த மின்னுற்பத்தியில், 48% அனல் மின்சத்தி மூலம் உற்பத்திசெய்யப்பட்டவை ஆகும். அதேவேளை 2022 ஆம் ஆண்டில மீள புதுப்பிக்கத்தக் சச்தி வளக் கலவையின் பங்கு 52% ஆகும். இவ் மீளப்புதுப்பிக்கத்தக் சச்தியில் 34 சதவீத பிரதான நீர் மின்சக்தியையும் மற்றும் ஏனைய புதுப்பிக்கத்தக் சச்தி வளங்களான, காற்று வலு, சூரிய சக்தி (GM), சிறிய அளவிலான நீர் மின்சக்தி மற்றும் மாநகர சபை திண்மக்கழிவுகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தி உள்ளடங்கலான சக்தி வளங்களில் இருந்து 15 சதவீதமும் மற்றும் கூரை மீது பொருத்தப்பட்ட சூரிய மின்தகடுகள் மூலம் 3 சதவீதமமும் மின்சக்தி பெற்றுக்கொள்ளப்பட்டன. பிரதான மின்னுற்பத்தியில் பங்கு வகிக்கும் அனல் மின்சாரமானது, 33 சதவீதம் நிலக்கரியில் இருந்தும் மற்றும் 15 சதவீதம் டீசலில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டன(இதில் இலங்கை மின்சார சபைக்கு உரித்தாக 8 சதவீத அனல் மின்சார நிலையங்களும் மற்றும் தனியாருக்கு உரித்தாக 7 சதவீத அனல் மின்சார நிலையங்களும் உள்ளன).

வரைபு 2.4
மின்னுற்பத்தி கலவை –2022




மூலம்: இலங்கை மின்சார சபை

கடந்த ஐந்து வருடங்களில் ஏனைய மீளப்புதுப்பிக்கத்தக் சச்தி வளத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் மின்சார உற்பத்தி அதிகரித்துள்ளது. 2016 செப்ரெம்பர் மாதத்தின்


பின்னர் ஏனைய மீளப்புதுப்பிக்கத்தக் சச்தி வளமான கூரை மீது பொருத்தப்பட்ட சூரியசக்தி மின்கலங்களின் பாவனைகள் படிப்படியாக அதிகரித்து செல்வதனைக் காணமுடிகின்றது.

வரைபு 2.5
ஏனைய மீள புதுப்பிக்கப்பட்ட சக்தி வள உற்பத்தி



மூலம்: இலங்கை மின்சார சபை

வரைபு 2.6
கூரையின் மேல் உள்ள சூரியசக்தி மின் தகட்டினால் உருவாக்கப்படும் மின்னுற்பத்தி



மூலம்: இலங்கை மின்சார சபை

2.3 மின்சாரத்திற்கான கேள்வி மற்றும் நுகர்வு வளர்ச்சி

2022 ஆம் ஆண்டின் மின்சாரத்திற்கான கேள்வி 0.1 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது. இக் காலப்பகுதியில் அதிக பட்சம் பதிவு செய்யப்பட்ட மின்சாரத்திற்கான கேள்வியானது 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தொகையான 2,802 மெகா வாட் ஆக உள்ளதுடன் இது 2022 ஆம் ஆண்டில் 2,709 மெகா வாட் ஆக காணப்பட்டுள்ளது. இதற்கிணங்க 2022 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட மின்சாரத்திற்கான நாளாந்த சராசரிக் கேள்வி கிட்டத்தட்ட 40 GWh ஆகும்.


2022 ஆம் ஆண்டில் மொத்த மின்சார பாவனையாளர்களின் எண்ணிக்கை 7,547,472 ஆகும். எனினும், 2021 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மொத்த மின்சார பாவனையாளர்களின் எண்ணிக்கை 7,299,633 ஆகும். இதற்கிணங்க 247,839 புதிய மின்சார இணைப்புக்கள் 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2
மின்சார பாவனையாளர்களின் கணக்குகள்

கட்டண வகையீடு	பாவனையாளர்களின் எண்ணிக்கை (2022 டிசம்பரில் உள்ளவாறான)	பாவனையாளர்களின் எண்ணிக்கை (2021 டிசம்பரில் உள்ளவாறான)
வீட்டுக்குரிய	6,471,242	6,271,727
சமயவழிபாட்டுத் தலங்கள்	45,875	44,543
கைத்தொழில்	72,221	69,069
பொதுத் தேவைகள்	941,303	899,193
ஹோட்டல்	642	665
அரசாங்க	9,741	9,385
விவசாயம்	2,733	1,477
வீதி விளக்குகள்	3,715	3,574
மொத்த பாவனையாளர்கள்	**7,547,472**	**7,299,633**

மூலம்: இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார தனியார் கம்பனி

வரைபு 2.7
மின்சார பாவனையாளர்களின் கணக்குகள் (2022 டிசம்பரில் உள்ளவாறான)



மூலம்: இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார தனியார் நிறுவனம் (LECO)

2.4 மின்னுற்பத்தி விரிவாக்கங்கள்

அதிகரித்துச் செல்லும் மின்சாரத்திற்கான கேள்வியை பூர்த்தி செய்யும் பொருட்டு அமைச்சானது அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் மற்றும் இலங்கை மின்சார சபையின் நீண்ட கால மின்னுற்பத்தி விரிவாக்கத்திட்டத்திற்கும் ஏற்ப, மின்னுற்பத்திக் கருத்திட்டங்களை நடைறைப்படுத்தி வருகின்றது. 2022 ஆம் ஆண்டில் அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட பின்வரும் மின்னுற்பத்தி திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் காணப்படுகின்றன. இவை பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

2.4.1 மீளப்புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தி

- **பிரதான நீர் மின்சக்தி**

i. ப்ரோட்லேன்ட் (Broadlands) நீர்மின்சக்திக் கருத்திட்டம் – 35 மெகா வாட்

2022 ஆம் ஆண்டின் இறுதியில் இவ் மின்நிலையத்தின் மூலம் மின்னுற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2022 ஆம் அண்டில் இவ் மின்நிலையத்தினால் 98 GWh மின் அலகுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் தூய அபிவிருத்தி பொறிமுறைப் (CDM) பதிவினைப் பெற்றுக் கொண்ட முதலாவது பாரிய அளவிலான நீர்மின்சக்திக் கருத்திட்டம் இதுவாகும். இக் கருத்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த மின்னுற்பத்தி 126 GWh ஆகும். இவ் கருத்திட்டத்தின் செலவினம் USD 82 மில்லியன் ஆகும்.

ii. உமா ஓயா நீர் மின்சக்திக் கருத்திட்டம் – 120 மெகா வாட்

நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கம், மொனராகலை, மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களில் அண்ணளவாக 5,000 ஹெக்டேயர் அளவிலான காணிகளில் விவசாய நடவடிக்கைகளுக்கு நீர்ப்பாசன வசதியை வழங்குவதற்காக 145 கன மீற்றருக்கு திருப்பியனுப்புவதும் மற்றும் வருடாந்தம் 290 GWh மின்சக்தியை உற்பத்தி செய்வதுமாகும். இக்கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு USD 530 மில்லியனாகும். இக் கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 99 சதவீதமானவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2023 யூன் 29 ஆம் திகதியில் இவ் மின்நிலையத்தின் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனினும், இவ் கருத்திட்டத்திற்கான நிதியியல் (குறிப்பாக வெளிநாட்டு நாணய) பிரச்சினைகள் காரணமாக இவ் கருத்திட்டம் தாமதமாகியுள்ளது.

iii. மொறகொல்லை நீர்மின்சக்திக் கருத்திட்டம் – 31 மெகா வாட்

மொறகொல்லை நீர்மின் சக்திக் கருத்திட்டமானது, மகாவலி ஆற்றின் வடிநிலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இறுதி நீர்மின் சக்திக் கருத்திட்டமாகும். இக்கருத்திட்டத்தின் தளமானது கண்டி மாவட்டத்தின் உலப்பனை பிரதேசத்தில் அமைந்துள்ளது. இக்கருத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த எரிசக்தி உற்பத்தி 100 GWh ஆகும். இக்கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் USD 114 மில்லியன்களாக உள்ளதோடு, இதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) நிதி உதவியை வழங்கியுள்ளது. இவ் கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 45 சதவீதம் பூர்த்திசெய்யப்பட்டுளளதுடன் இவ் கருத்திட்டத்தினை 2024 மே 23 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கும் மற்றும் மின்னுற்பத்தி செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மின்சார நிலையத்திற்கு தண்ணீரை கொண்டு செல்வதற்கான குழாய் கட்டமைப்பு நிர்மாணப் பணிகள்



மூலம்: இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார தனியார் நிறுவனம் (LECO)

மின்சார நிலைய நிர்மாணப் பணிகள்



மூலம்: இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார தனியார் நிறுவனம் (LECO)

- **ஏனைய மீளப்புதுப்பிக்கத்தக்க சக்திகள**

i. சூரிய மின்சக்தி

அ. கூரை மீது பொருத்தப்படும் சூரிய மின்சக்தி நிகழ்ச்சித்திட்டம் – சூர்ய பல சங்க்ராமய

இந்நாட்டின் மக்கள் மீளப்புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை அடிப்படையாகக் கொண்ட மின்னுற்பத்தியை இணைப்பதற்காக குறைந்த வட்டியிலான கடன் வசதியொன்றின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டு கூரை மீது பொருத்தப்படும் சூரிய மின்சக்தி நிகழ்ச்சித்திட்டமான சூர்ய பல சங்க்ராமய நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வீடுகளையும் மற்றும் வர்த்தக நிறுவனங்களையும் அடிப்படையாகக் கொண்டு 5 KW சூரிய மின் தகடுகளைக் கொண்ட மின் திட்ட முறைமை ஒன்றினை ஸ்தாபிப்பதற்காக இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு USD 50 மில்லியன் கடன் உதவியொன்றை வழங்கியது. இக்கடன் நிதி 2021 ஆம் ஆண்டில், முழுமையாகப் பயன்படுத்தி 71 மெகாவாட்கொள்திறன் கொண்ட சூரிய மின் தகடுகளின் ஊடாக சூரிய மின் வலையமைப்புக்கு சேர்க்கக் கூடியதாக இருந்தது. அமைச்சு இந்நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இரண்டாவது கட்டத்திற்கு USD 80 மில்லியன் நிதி கோரப்பட்டுள்ளதோடு, இக்கோரிக்கையான தற்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது. சூர்ய பல சங்க்ராமய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் ஏற்கனவே 47,604 கூரை மீது பொருத்தப்பட்ட சூரிய மின்தகடுகளைக் கொண்ட மின் கருத்திட்ட முறைமை மூலம் தற்போது (2023 மார்ச்) சுமார் 700 மெகாவாட் கொள்திறன் தேசிய வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. கூரை மீது பொருத்தப்படும் மின் தகடுகளைக் கொண்ட மின் கருத்திட்டத்தில் மூன்று நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளதோடு, 2022 டிசம்பர் மாதமளவில் அதன் முன்னேற்றம் பின்வருமாறு.

அட்டவணை 2.3
2022 டிசம்பரில் உள்ளவாறு கூரை மீது பொருத்தப்படும் சூரியசக்தி மின்கலங்கள் திட்டத்தின் செயற்பாடுகள்

திட்டங்கள்	மின் பாவனையாளர்கள்	கொள்திறன் (KW)
நெட் மீற்றரிங்	14,246	107,895
நெட் எகௌன்டிங்	28,421	248,421
நெட் ப்ளஸ்	3,118	305,542
மொத்தம்	**45,785**	**662,339**

மூலம்: இலங்கை மின்சார சபை, வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார தனியார் நிறுவனம் (LECO)

ஆ. சிறிய அளவிலான நிலத்தின் மீது பொருத்தப்பட்ட சூரிய மின் பொறிகள் (68X1 மெகா வாட்)

இக் கருத்திட்டத்தின் மூலம் 36 மெகா வாட் மின்சாரம் தேசிய வலையமைப்புக்கு சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் 32 மின்நிலையங்களின் நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ் மின்சார நிலையங்களின் மின்னுற்பத்தி செயற்பாடுகள் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இ. 2X10 மெவோ சூரிய மின் நிலையங்கள் (வாழைச்சேனை மற்றும் வவுனதீவு)

2022 ஒக்ரோபர் 11 ஆம் திகதி வவுனதீவில் 10 மெகா வாட் கொள்திறன் கொண்ட சூரிய மின் நிலையம் திறக்கப்பட்டது. 10 மெகா வாட் கொள்திறன் கொண்ட வாழைச்சேனை மின் நிலையம் நிர்மாணக் கட்டத்தில் உள்ளது.

ஈ. 1–10 மெகா வாட் சூரிய சக்தி மின் நிலையங்கள் (மொத்தம் 147 மெகா வாட்)

2021 மார்ச் 02 ஆம் திகதி தனியார் முதலீடுகளை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி செய்வதற்காக ஒவ்வொன்றும் 1 - 10 மெகா வாட் வரையிலான மொத்தம் 147 மெகா வாட் சூரிய சக்தி மின் நிலையக் கருத்திட்டங்கள் பல தெரிவு செய்யப்பட்டுள்ளதெனினும், 109 மெகா வாட் கொள்திறனைக் கொண்ட மின் நிலையங்களுக்கான கேள்வி மனுவே வழங்கப்பட்டது. எனினும், 88 மெகா வாட்டுக்கு மட்டுமே SLSEA ஆல் தற்காலிக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இவ் கருத்திட்டத்திற்கான நிர்மாணப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதோடு இதன் வர்த்தக ரீதியான செயற்பாடுகள் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் மற்றும் 2024 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

உ. 100 மெகா வாட் சியம்பலாண்டுவ சூரிய மின்சக்திப் பூங்கா

இவ் கருத்திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பொருத்தமான அபிவிருத்தியாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான வேண்டுகோள்களுக்கான முன்மொழிவு (RFP) 2022 ஆம் ஆண்டில் கோரப்பட்டது. இதற்கான நிதியியல் மதிப்பீடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதோடு பேரம்பேசும் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அத்துடன், மின்சார பரிமாற்றலுக்கு அவசியமன மாதகம-அம்பாறை பரிமாற்றல் நிலையத்தை மெருகேற்றுவதற்கான செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

மேற்கூறப்பட்ட சூரியசக்தி கருத்திட்டங்களுக்கு மேலதிகமாக, மகியங்கணையில் 10 மெகா வாட் திறன் கொண்ட சூரியசக்தி மின்நிலையத்தின் நிர்மாணப்பணிகள் நடைபெற்றவண்ணமுள்ளது.

ஊ. USD 100 மில்லியன் இந்தியன் கடன் திட்டத்தின் கீழான சூரியசக்தி திட்டம்

இந்தியன் கடன் திட்டத்தின் கீழான USD 100 மில்லியன் கடன் வசதியில் இலங்கையில் பின்வரும் திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. அவையாவன

- அரச கட்டடங்களில் கூரையின் மேல் சூரியசக்தி மின்கலங்களை பொருத்துதல் (USD 85 மில்லியன்)
- சமய நிறுவனங்களில் கூரையின் மேல் சூரியசக்தி மின்கலங்களுடன் மின்சாரத்தை சேமிக்கும் கொள்திறன் உள்ள மின்கலங்களை பொருத்துதல் மற்றும் நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை (Reverse Osmosis Plant) நிறுவுதல்
- மிதக்கும் சூரியசக்தி முன்னோடித் திட்டம் (USD 5 மில்லியன்)

இத் கருத்திட்டத்தின் நோக்கம் 120 MW சூரியசக்தியை தேசிய வலைப்பின்னலுடன் இணைப்பதாகும். இத் திட்டத்தின் காலம் டிசம்பர் 2022 இல் இருந்து 2025 டிசம்பர் வரையான 03 வருடத்தைக் கொண்டதாகும். இவ் கருத்திட்டமானது 03 கட்டங்களைக் கொண்டமைந்தாகும். அவையாவன கருத்திட்டத்திற்கான விரிவான அறிக்கையை தயாரித்தல், கருத்திட்ட முகாமைத்துவ ஆலோசனை, மற்றும் பொறியியல், பெறுகை மற்றும் நிர்மாண (EPC) ஒப்பந்தம்

போனறனவாகும். இவ் ஒப்பந்தம் விரிவான கருத்திட்ட அறிக்கையை சமர்ப்பித்த (DPR) இந்தியாவின் Darashaw & Company Pvt Ltd நிறுவனத்திற்கு USD 930,209.487 பெறுமதியில் 2022.11.16 ஆம் திகதி அன்று வழங்கப்பட்டது. இவ் சூரியசக்தி மின்கலங்களை பொருத்துவதற்கான இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

எ. இந்தியன் கடன் திட்டத்தின் கீழான கூரையின் மேல் சூரியசக்தி மின் தகடுகளை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம் (USD 10 மில்லியன்)

இவ் கருத்திட்டமானது சமய ஸ்தலங்களுக்கான மின்சக்தி சேமிப்பை நோக்காகக் கொண்டு கூரை மீது சூரியசக்தி மின்கலங்களை பொருத்தும் திட்டமாக இது ஆரம்பிக்கப்பட்டதுடன் இவை பின்தங்கிய பிரதேசங்களில் இருந்து மின்சாரத்தை பெற்றுக்கொள்வதனால் தேசிய வலையமைப்புடன் இவ் மின்சார கட்டமைப்பு இணைக்கப்படவில்லை. இதற்கான கடன் வசதிகளை இந்தியாவின் EXIM வங்கி வழங்குவதுடன் இவ் கருத்திட்டத்திற்கான காலம் 2022 டிசம்பரில் இருந்து 2025 டிசம்பர் வரையான 03 வருடங்களை கொண்டமைந்ததாகும்.

ஏ. யாழ்ப்பாணக் குடாநாட்டின் மூன்று தீவுகளில் ஹைபிறிட் மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சார முறையை நிர்மாணிப்பதற்கான திட்டம்

யாழ்ப்பாண குடாநாட்டிற்கு உரித்தான நெடுந்தீவு, அனலதீவு மற்றும் நைனாதீவு ஆகிய மூன்று சிறு தீவுகளில் ஹைபிறிட் மீளப்புதுப்பிக்கத்தக்க மின்சார முறையை நிர்மாணிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2022.03.28 ஆம் திகதி அன்று இந்திய அரசிற்கும் இலங்கை அரசிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. இத் திட்டதிற்கான செலவினம் USD 11 மில்லியன் ஆகும் அல்லது கேள்வி மனுவின் பெறுமதியில் குறைந்த தெகை. இதற்கு 75% நன்கொடை மூலமும் 25% இந்தியாவின EXIM வங்கி மூலமும் கடன் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படும். இத் கருத் திட்டத்திற்கான காலம் 2023 தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான ஒரு வருட காலமாகும்.

ii. காற்றாலை மின்சக்தி

பின்வரும் பிரதான மீளப்புதுப்பிக்கத்தக்க எரிசக்திப் பூங்காக்களை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுவதோடு, இதற்கான பூர்வாங்க செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அ. மன்னார் காற்றாலை திட்டம் – கட்டம் 1 இன் விரிவாக்கம்

தப்பவன்னி காற்றாலைப் பூங்காவில் உள்ள 103 MW திட்டத்திற்கு மேலதிகமாக, 50 MW காற்றாலைப் பூங்கா கருத்திட்டமானது இலங்கை மின்சார சபையால் தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை USD 69 மில்லியன் ஆகும். இதற்கான சுற்றாடல் சமூக தாக்க மதிப்பீடுகள் (ESIA) 2022 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான காணிகளை (65 ஹெக்டயர்) கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்றுகொண்டிருக்கின்றன. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் (ADB) வழங்கப்பட்ட கடன் சேமிப்பின் USD 40 மில்லியன் இவ் கருத்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆ. 286 மெகா வாட் மன்னார் காற்றாலைப் பூங்கா

286 மெகா வாட் காற்றாலை கொள்திறன் அபிவிருத்திக்கான தற்காலிக ஒப்புதல் அதானி கிரீன் எனர்ஜி பிரைவேட் லிமிட்டெட் (Adani Green Energy (Pvt) Limited) நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இ. பூநகரியில் 234 மெகா வாட் காற்றாலை பூங்கா

பூநகரிப் பிரதேசத்தில் 234 மெகா வாட் காற்றாலை மின்சக்திப் பூங்காவை நடைமுறைப்படுத்துவதற்கு Adani Green Energy (Pvt) Limited நிறுவனத்திற்கு தற்காலிக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. காணிக் கொள்வனவு நடவடிக்கையானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நன்கொடை நிதியைப் பயன்படுத்துவதன் மூலம் இக்

கருத்திட்டத்தின் முதலாம் கட்டமாக (100 மெகா வாட்) சூழல் மற்றும் தாக்க மதிப்பீட்டு (IEE) செயற்பாடுகள் 2022 ஒக்ரோபர் மாதம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

ஈ. மேலும், தனியார் முதலீட்டினைப் பயன்படுத்துவதன் மூலம் மொத்தம் 60 மெகா வாட் கொள்திறனைக் கொண்ட் (ஒவ்வொன்றும் 1-10 மெகா வாட்) பின்வரும் சிறிய அளவிலான காற்றாலைமின்நிலையங்கள் மன்னார் (10 மெகா வாட் மற்றும் 5 மெகா வாட்), மாதம்பை (2x5 மெகா வாட்) மற்றும் திருகோணமலை (10 மெகா வாட்)ஆகிய பிரதேசங்களில் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் மின்சார நிலையங்களின் நிர்மாணப் பணிகள் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்திசெய்யப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

2.4.2அனல் மின்னுற்பத்தி – திரவ இயற்கை வாயு (LNG) அபிவிருத்தி

அ. முதலாவது 350 மெகா வாட் திறன் உள்ள திரவமயமாக்கப்பட்ட இயற்கை வாயு (LNG) மின் நிலையம் – 'சோபதனவி', கெரவலப்பிட்டிய

இத் திட்டம் செயற்பாட்டு நிலையில் உள்ளது. இவ் மின்நிலையத்தில் எரிவாயு விசையாழி (Gas Turbine) மற்றும் மின்பிறப்பாக்கிகள் 2023 ஆம் ஆண்டு ஜனவரியில் பொருத்தப்பட்டுள்ளது. இதன் மொத்த பௌதீக செயற்பாடுகள் 22% ஆகும். இங்குள்ள எரிவாயு விசையாழியின் (Gas Turbine) சுழற்சி செயற்பாடுகளை 2023 ஆம் ஆண்டு இறுதியில் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஆ. திரவ இயற்கை வாயு (LNG) வழங்கலுக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்திகள்

இவ் திட்டத்தின் கீழ் மூன்று பகுதிகள் உள்ளடங்கும். அவையாவன்

i. கெரவலப்பிட்டியவில் கடலுக்கு அப்பால், மீளவாயுவாக்கல் மிதக்கும் களஞ்சியப் பகுதி (FSRU) மற்றும் நங்கூரமிடல் முறைமைகளை நிறுவுதல்(இலங்கை மின்சார சபையால்)
ii. கெரவலப்பிட்டிய மற்றும் களனிதிஸ்ஸ மின்சார நிலையங்களிற்கு மீளவாயுவாக்கல் மிதக்கும் களஞ்சியப் பகுதியில் (FSRU) இருந்து வாயு குழாய் வலைப்பினலை நிறுவுதல் (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால்)
iii. மீளவாயுவாக்கல் மிதக்கும் களஞ்சியப் பகுதிக்கு (FSRU) தேவையான திரவ இயற்கை வாயுவை (LNG) வழங்கல் (இலங்கை மின்சார சபையால்)

திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பொருத்தமான அபிவிருத்தியாளரை 2023 ஆம் ஆண்டில் தெரிவுசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

2.5 மின் பரிமாற்றல் மற்றும் விநியோக அபிவிருத்திகள்

- இலங்கையின் மின் பரிமாற்றல் வலையமைப்பானது, 220 கிலோ வாட் கொண்ட 799 கி.மீ நீளமுள்ள பரிமாற்றல் இணைப்பு மற்றும் 132 கிலோ வாட் கொண்ட 2,361 கி.மீ பரிமாற்றல் இணைப்பையும் உள்ளடக்கியுள்ளது. இவ் வலையமைப்பில் 79 உப-மின்நிலையங்களும் மற்றும் 134 பிரதான உப- மின்நிலையங்களும் உள்ளடங்கியுளளது. இதன் மின் பரிமாற்றல் வலையமைப்பில் முழுமையான செயற்பாடுகள் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ் விநியோக வலையமைப்பானது, 33 கிலோ வாட் கொண்ட 33,138.27 நீளமுள்ள மின் இணைப்பு, 11 கிலோ வாட் கொண்ட 150,169 கி.மீ நீளமுள்ள குறைந்த மின்னழுத்த மின் இணைப்பு மற்றும் 33,476 விநியோக வலையமைப்பு உப- மின்நிலையங்களையும் கொண்டுள்ளது.

- பின்வரும் பரிமாற்றல் இணைப்புக்கள் மற்றும் வலையமைப்பு உப-மின்நிலையங்கள் 2022 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. அவையாவன

i. புதிய ஹபரணையிலிருந்து வாழைச்சேனை வரை 132 கிலோ வாட் கொண்ட 100 கி.மீ நீளமுள்ள பரிமாற்றல் இணைப்பு நிர்மாணம்
ii. புதிய ஹபரணையிலிருந்து பொலநறுவை வரை 132 கிலோ வாட் கொண்ட 44 கி.மீ நீளமுள்ள பரிமாற்றல் இணைப்பு நிர்மாணம்
iii. ஹபரணையிலிருந்து புதிய ஹபரணையிலிருந்து வரையான வலையமைப்பு உப - மின்னிலையத்திற்கு 132 கிலோ வாட் கொண்ட 3 கி.மீ நீளமுள்ள பரிமாற்றல் இணைப்பு நிர்மாணம்
iv. மாதம்பே, தெகிவலை மற்றும் பியகம வலையமைப்பு உப - மின்னிலையங்களை இணைப்பதற்கான பணிகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளது.

- அத்தியாயம் 01, பிரிவு 1.7 இல் கூறப்பட்ட பரிமாற்றல் திட்டங்கள் 2022 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டவை ஆகும்.

- **விரைவூக்க வலையமைப்பு முன்னோடித் திட்டம்**

மீளப்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களின் ஊடாக உற்பத்தி செய்யப்பட்ட மின்சக்தியை அதிக அளவில் மிகவும் வினைத்திறனான முறையில் மின் திட்ட முறைமைக்குள் உள்வாங்கும் நோக்குடன் சூரிய மற்றும் மின்கல களஞ்சியப்படுத்தல் தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட சிறிய அளவிலான விரைவூக்கமுள்ள வலையமைப்பு முன்னோடிக் கருத்திட்டமொன்று வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனியினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு 2022 செப்ரெம்பர் மாதத்தில் அதன் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு USD 26 மில்லியனாக உள்ளதோடு, இத்தொகையானது, ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

2.6 காலநிலை மாற்ற செயற்பாடுகள்

2.6.1 தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்கள் (NDCs) – மின்சக்தித் துறை

தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புக்களை (NDCs) நமுறைப்படுத்தல் தொடர்பான முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டதோடு, முதலாவது திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் குறிப்பிட்ட காலப்பகுதியில் நடாத்தப்பட்டது. சாதாரண நிலைமையொன்றுக்கு (BAU) ஒப்பீட்டு ரீதியில் மின்சக்தித் துறையின் பச்சை வீட்டு வாயுவின் (GHG) வெளியேற்றத்தின் குறைப்பானது 25 சதவீதமாகும். (5 சதவீதம் நிபந்தனைகளின்றியும், 20 சதவீதம் மற்றும் நிபந்தனைகளுடனும்) 2021 - 2030 ஆண்டு காலப்பகுதிக்குள் மதிப்பீடு செய்யப்பட்ட பச்சை வீட்டு வாயுவின் வெளியேற்றத்தினைக் குறைப்பதானது நிபந்தனைகளின்றி 9,819,000 மெற்றிக் தொன்களாக உள்ளதோடு, நிபந்தனைகளுடன் 39,274,000 மெற்றிக் தொன்களுமாகும். (மொத்த 49,093,000 மெற்றிக் தொன்)

2.6.2 மின்சக்தி தொழிற்துறையின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 7 - அனைவருக்கும் குறைந்த விலையில், நம்பகமானதும், நிலைபேறான மற்றும் நவீன சக்தி வளத்தினை பெற்றுக்கொள்வதை உறுதிசெய்தல்.

சக்தி வழங்கலை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பரிமாற்றல் முறைகள், மனித மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு தடங்கலாக உள்ளது. இவ் பூமியில் இருந்து மீளப்புதுப்பிக்கத்தக்க மற்றும் மீளப்புதுப்பிக்கத்தகாத சக்தி வளங்களலான சூரியசக்தி, காற்றுவலு, நீர் மின்சாரம், பௌதீக அனல் மின்சாரம், மாநகர கழிவில் இருந்தான மின்சாரம், இயற்கை வாயு, நிலக்கரி மற்றும் பெற்றோலியம் போன்றவற்றை பெற்றுக்கொள்ள முடியும்.

பச்சை வீட்டு வாயுவின் (GHG) வெளியேற்றத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாததால் புதைபொருள் எரிபொருட்களின் (Fossil Fuel) பாவனைகள் அதிகரித்து செல்வதனால், இது பூமியின் காநிலை மாற்றத்தில் பாரிய தாக்கத்தை செலுத்துகின்றது. சக்தி வளத்தை வினைத்திறனுடனும் மற்றும் மீளப்புதுப்பிக்கத்தக்க சக்தி வளத்தின் பாவனைகள் போன்றன அதிகரித்துள்ளதால், இவை காலநிலை மாற்றங்களை குறைப்பதிலும் மற்றும் காலநிலை மாற்றத்தால் வரும் அழிவுகளை தடுப்பதிலும் அதிக பங்களிப்பை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கிணங்க, மின்சக்தி தொழிற்துறை பின்வரும் பங்களிப்புக்களை வழங்கியுள்ளது. அவையாவன

- 99.9% உள்நாட்டு மின்சாரத்தை வழங்குவதற்கும் மற்றும் தரமான மின்சார விநியோகத்திற்குமான விநியோக வலையமைப்பை விருத்திசெய்தல்
- நாட்டில் மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கான திறன் 100% உள்ளது
- மொத்த உற்பத்தி கலவையில் 52% மின்சாரம் மீளபுதுப்பிக்கத்தக்க சக்தி வளங்கள் மூலம் வழங்கப்படுகிறது
- 2022 ஆம் ஆண்டுக்குள் 662 MW; கூரை சூரிய மின்சக்தி திறன் தேசிய வலையமைப்புடன் இணைக்கப்படும்
- 2022 இல் வனைத்திறன் மிக்க பயன்பாட்டுத் திட்டங்கள் மூலம் 737 GWh சக்தி வளங்கள் சேமிக்கப்படும்

2.7 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள்

ஐக்கிய அமெரிக்க உதவி நிறுவனம் (USAID) இலங்கை எரிசக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கை மின்சார சபைக்கு 4.23 ஐஅடொ மில்லியனையும், இலங்கை நிலை பெறுதகு வலு அதிகார சபைக்கு 3.6 ஐஅடொ மில்லியனையும் மற்றும் வரையறுக்கப்பட்ட லங்கா மின்சாரக் கம்பனிக்கு 1.9 ஐஅடொ மில்லியனையும் வழங்க முன் வந்துள்ளது. இந்நிகழ்ச்சித்தட்டத்தின் காலப்பகுதி 2022 - 2025 ஆகும். 2022 ஆம் ஆண்டில் இரு வழிப்படுத்தல் குழுக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

2.8 2022 ஆம் ஆண்டின் வரவுசெலவு–த்திட்ட முன்மொழிவுகள்

மீளபுதுப்பிக்கத்தக்க சக்தி வள அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 2022 இடைக்கால வரவுசெலவுத்திட்டத்தில் ரூ.80 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.36.5 மில்லியளை உபயோகித்து, வேரவில், கரைச்சி, மாந்தை-மேற்கு மற்றும் துணுக்காய் ஆகிய இடங்களில் அமைந்துள்ள முன்மொழியப்பட்ட மீளபுதுப்பிக்கத்தக்க சக்தி வள இடங்களுக்கு மேலாக இலங்கை நிலைபெறுதகு வலுசக்தி அதிகார சபையானது ஆளில்லா விமானங்கள் மூலம் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது

வலுசக்தி பிரிவு

2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள்

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் கீழ் வரும் வலுசக்தி பிரிவால் 2022 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

- பெற்றோலியத் தொழிற்துறையை தாராளமயமாக்குவதற்குத் தேவையான சட்ட சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல்
- எரிபொருள் தொழிற்துறையை மீட்டெடுக்கும் வகையில் வெளிநாட்டு

முதலீட்டாளர்களை நாட்டிற்கு ஈர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

- எரிபொருள் செலவினங்களை ஈடுசெய்வதற்கு எரிபொருள் விலை பொறிமுறையை அறிமுகப்படுத்துதல்
- எரிபொருள் நுகர்வோர் மத்தியில் பெற்றோலியப் பொருட்களை சமமாக விநியோகிக்குமுகமாக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறையை அறிமுகப்படுத்துதல்
- வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு பிரத்தியேக தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறையை அறிமுகப்படுத்துதல்
- எரிபொருள் பெறுகை முறைகளை எளிதாக்கும் முறையினை அறிமுகப்படுத்துதல்
- விவசாயம், கைத்தொழில், போக்குவரத்து மற்றும் மீன்பிடி போன்ற விசேடமாக அடையாளம் காணப்பட்ட துறைகளுக்கான எரிபொருள் விநியோகத்திற்கு முன்னுரிமை வழங்குதல்.

2.9 2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய எரிபொருள் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட கொள்கை நடவடிக்கைகள்

அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்தமை மற்றும் நாட்டில் நிலவிய பாரிய பணவீக்க நிலைமைகள் காரணமாக நாடு எரிபொருள் நெருக்கடியை எதிர்கொண்டது. வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறையால் ஏற்பட்ட வலுசக்தி நெருக்கடியை பூர்த்திசெய்வதற்கு, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு 2022 ஆம் ஆண்டில் பின்வரும் கொள்கை நடவடிக்கைகளை அமுல்படுத்தியுள்ளது.

i. வெவ்வேறு கொடுப்பனவு விதிமுறைகளின் கீழ் பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாற்று சந்தர்ப்பங்கள்

- NRR ESCROW கணக்கு முறை மூலம் கொடுப்பனவுகளை செலுத்துதல்.
  CPC உள்ளூர் நாணயத்தில் செலுத்துவதற்கும் மற்றும் CBSL ஆல் வழங்கப்பட்ட உத்தரவாதத்தின் படி ஒரு குறிப்பிட்ட கடன் காலத்திற்குப் பின்பு USD இல் திருப்பிச் செலுத்துவதற்கும் இவ் முறை சிறந்த உறுதுணையாக அமையும்.

- நாட்டில் களஞ்சியப்படுத்தும் மாதிரியின் (Ex.Storage) அடிப்படையின் கீழான கொடுப்பனவு
  இவ் முறையின் கீழ் எரிபொருள் கப்பற்சரக்கு தொகுதிகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தில் (CPSTL) களஞ்சியப்படுத்தப்படுவதோடு இவ் களஞ்சியத்திலிருந்து எரிபொருட்களை எடுக்கும் போது அதற்கான கொடுப்பனவுகள் துண்டு துண்டாக (piecemeal) செலுத்தப்படும். இவ் ஏற்பாடுகள் தொடர்ச்சியான எரிபொருள் வழங்கலை உறுதிசெய்வதோடு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமத்தின் காசுப்பாய்ச்சல் இறுக்கத்தையும் நெகிழ்ச்சியடையச் செய்யும்.

- CPC க்கு எந்த இறக்குமதி செலவும் இல்லாமல் ஜெட் A-1 இறக்குமதிக்கான மாதிரியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

  CPC அட்டவணையின்படி வழங்குனர்கள் தாங்களாகவே கப்பற்சரக்குகளை கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்பட்டதோடு இவற்றை விற்பனை செய்வதற்கான உரிமம் CPC மற்றும் CPSTL க்கு வழங்கப்பட்டுள்ளது. CPC யின் விமான செயற்பாட்டு பிரிவினால் வழங்கப்பட்ட விற்பனை தொகையின் படி வாராந்த அடிப்படையில் கொடுப்பவுகள் செலுத்தப்படும்.

- மிக அண்மைக்காலமாக மேற்கொண்ட முயற்சியின் பயனாக CPC புதிய கொடுப்பனவு பொறிமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது. அதாவது, ex- tanker/ மிதக்கும் களஞ்சியம். இவ் முறையின் மூலம் CPC குறித்த காலத்திற்குள் கொள்கலனில் இருந்து 2-3 தடவைகள் எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும். இதற்கான கொடுப்பனவுகள், கொள்கலனில் இருந்து எரிபொருளை பெற்றுக்கொள்ளும் போது செலுத்தப்படுதல் வேண்டும்.

- பதிவு செய்யப்பட்ட எண்ணெய் வழங்குனர்கள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (CPC) கேள்வி மனு கோரலில் பங்குபற்றுதல் குறைவடைந்துள்ளமையால், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு (CPC) எரிபொருளை வழங்குவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு அனைத்து ஆர்வமுள்ள தரப்பினருக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- இந்திய கடன் உதவி திட்டத்தின் கீழ் எரிபொருள் தேவைகளை பூர்த்தி செய்தல்

  இந்திய அரசிற்கும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையிலான கடன் உடன்படிக்கையின் பிரகாரம் இந்திய அரச வங்கியிடமிருந்து பெற்ற USD 1000 மில்லியனில் கடன் வசதியில் USD 200 மில்லியனும் மற்றும் இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியினால் குறுகிய கால கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட USD 500 மில்லியனும் எரிபொருள் இறக்குமதிக்காக இலங்கை அரசால் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கிணங்க USD 700 மில்லியன் எரிபொருள் இறக்குமதிக்காக இந்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. இவ் கடன் வசதியினை உபயோகித்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 17 கப்பற்சரக்குகளை கொள்வனவு செய்துள்ளது. அதன் விபரங்கள் கீழேயுள்ள 2.4 அட்டவணையில் விரிவாக தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.4
இந்திய கடன் உதவி திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் விபரங்கள்

இல	உற்பத்தி	கப்பற்சரக்குகளின் எண்ணிக்கை	தொகை (மெ.தொ)
1	ஒடோ டீசல்	8	301,440
2	சுப்பர் டீசல்	2	77,682
3	பெற்றோல் 92	6	221,053
4	ஜெட் A -1	1	31,485
மொத்தம்		**17**	**631,660**

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

ii. **முன்னுரிமைத் தொழிற்துறைகளின் எரிபொருள் தேவையை உறுதி செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை நடவடிக்கைகள்**

- கைத்தொழிற்துறையின் எரிபொருள் தேவைகள், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் ஊடாக வழங்குவதற்கு பதிலாக CPC ஆல் நேரடியாக பூர்த்திசெய்யப்படுகின்றது. இவ் முறையை ஒழுற்குபடுத்துவதற்கு, முன்னுரிமைப் பட்டியல் அறிமுகப்படுத்தப்படுள்ளது. மேலும் இதனை சிறந்த முறையில் ஒழுங்குபடுத்துவதற்கு இவ் முறையானது SAP ERP முறையுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

- விவசாய மற்றும் மீன்பிடித் தொழிற்துறைகளுக்கு தேவையான எரிபொருள், விவசாய அமைச்சு, மீன்பிடி அமைச்சு மற்றும் மாவட்ட செயலாளர்களின் உதவியுடன் CPC யின் அடையாளம் காணப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இவை தொடர்பான விபரங்கள் அட்டவணை 2.5 மற்றும் 2.6 இல் காட்டப்பட்டுள்ளது

அட்டவணை 2.5
தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இருந்து விவசாய தொழிற்துறைக்கான டீசல் வழங்கல்
(2022 – 2023)

இல	மாவட்டம்	வழங்கப்பட்ட டீசல் (லீற்றர்)
01	வவுனியா	1,293,600
02	யாழ்ப்பாணம்	547,800
03	மன்னார்	792,000
04	முல்லைத்தீவு	1,775,400
05	கிளிநொச்சி	1,452,000
06	மட்டக்களப்பு	3,973,200
07	அம்பாறை	9,253,200
08	திருகோணமலை	3,603,600
09	குருநாகல்	1,848,000
10	புத்தளம்	891,000
11	அனுராதபுரம்	8,190,600
12	பொலநறுவை	7,134,600
13	மொனராகலை	1,900,800
14	பதுளை	2,329,800
15	இரத்தினபுரி	963,600
16	கேகாலை	534,600
17	அம்பாந்தோட்டை.	1,999,800
18	மாத்தறை	1,075,800
19	காலி	712,800
20	கொழும்பு	468,600
21	கம்பகா	706,200
22	களுத்துறை	646,800
23	மாத்தளை	910,800
24	நுவரேலியா	6,600
25	கண்டி	712,800
மொத்தம்		**53,724,000**

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

அட்டவணை 2.6
மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்திற்கான டீசல் வழங்கல்
(2022 ஜனவரி 01 ஆம் திகதி – 2023 ஏப்பல் 25 ஆம் திகதி வரை)

இல	இடம்	வழங்கப்பட்ட டீசல்
01	புறுநாவல	6,071,600
02	மிரிஸ்ஸ	6,580,200
03	காலி	9,484,200
04	பேருவல	6,645,800
05	திருகோணமலை-	7,332,600
06	குடவல்ல	8,659,200
07	தங்காலை	3,352,800
08	ஹிக்கடுவை	1,894,200
09	கிரிந்த	396,000
10	கற்பிட்டி	574,200
11	மொறட்டுவ-	59,400
12	ஹம்பாந்தோட்டை	1,788,600
13	அம்பலாங்கொடை	3,082,200
14	நீர்கொழும்பு	4,283,400
15	வாழைச்சேனை	3,458,400
16	டிக்கோவிற்ற	13,134,000
17	நில்வல	4,270,200
18	சுதுவல்ல	3,082,200
19	மைலிட்டி	930,600
மொத்தம்		**85,079,800**

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

- ஏற்றுமதியாளர்கள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து (CPC) ஐக்கிய அமெரிக்க டொலரில் (USD) எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். மேலும், நாட்டில் வெளிநாட்டு நாணயத்தின் உட்பாய்ச்சலை உறுதிப்படுத்துமுகமாக ஏனைய வாடிக்கையாளர்களோடு ஒப்பிடுமிடத்து இவ் வாடிக்கையாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில்

எரிபொருளை வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் 2022 மார்ச் மாதத்தில் இருந்து 2023 ஜனவரி வரையான காலப்பகுதியில் USD 38,430,975.18 வருமானமாக பெறப்பட்டுள்ளது.

- பொது போக்குவரத்து, சுகாதார சேவை மற்றும் தொலைத்தொடர்பு சேவை போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கான எரிபொருள் தேவையை பூர்த்தி செய்வதற்கு அமைச்சும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

- சுற்றுலாத்துறையின் எரிபொருள் தேவையை பூர்த்திசெய்வதற்காக Dialog Axiata PLC மற்றும் சம்பத் வங்கி ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் சுற்றுலா பயணிகளுக்கான எரிபொருள் அனுமதிப்பத்திர முறை (TFP) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத் தொழிற்துறையில் பயன்படுத்தப்படும் வாகனங்கள் அல்லது இவ் எரிபொருள் அனுமதிப்பத்திரத்தை கொள்வனவு செய்யும் நபர்கள், இவ் எரிபொருள் அனுமதிப்பத்திர முறையின் ஊடாக தேவையான எரிபொருளை பெற்றுக்கொள் முடியும். மேலும், இவ் சுற்றுலா பயணிகளுக்கான எரிபொருள் அனுமதிப்பத்திர முறையின் (TFP) ஊடாக கொள்வனவு செய்யப்படும் அனைத்து எரிபொருளுக்குமான கொடுப்பனவுகள் ஐக்கிய அமெரிக்க டொலரிலேயே (USD) செலுத்தப்படும். இவ் டொலரின் உட்பாய்ச்சல் மூலம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செய்யப்படும் எரிபொருக்கான கொடுப்பனவுகளை செலுத்தக்கூடியதாக இருக்கும்.

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறையை அறிமுகம் செய்தல்





சுற்றுலா பயணிகளுக்கான எரிபொருள் அனுமதிப் பத்திரம் (TFP)



திருகோணமலை தாங்கிப் பண்ணை



இ.பெ.கூ. மசகு எண்ணெய் இறக்கும் மிதவை



இ.பெ.கூ. சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்



இ.பெ.கூ. சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்



எரிபொருள் நிரப்பு நிலையம்



2.10 நாட்டின் சக்திவள பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பெற்றோலியத் தொழிற்துறையில் அறிமுகப்-படுத்தப்பட்டுள்ள சீர்திரு-த்தங்கள்

அ. 2022 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க பெற்றோலிய பொருட்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தப்பட்ட) சட்டம் உருவாக்கப்பட்டமை

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டத்தினை அமுல்படுத்துவதன் மூலம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கீழ் நிலை பெற்றோலியத் தொழிற் துறையில் தனியுரிமை நிறுவனமாக விளங்கி வந்தது. இதன் மூலம் பெற்றோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், வழங்கல் அல்லது விநியோகித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. எவ்வாயினும், 2022 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலியப் பொருட்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் ஏனைய போட்டியாளர்களும் பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்தல் மற்றும் விநியோகம் செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சட்ட ஏற்பாடுகளின் படி நிறுவப்பட்ட "வலுசக்தி வழங்கல் குழு" இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு செயலிழந்துவிட்டதால், புதிய முதலீட்டாளர்கள் கீழ்நிலை பெற்றோலியத் தொழிற்துறையை அணுகுவதற்கான வாய்ப்புக்கள் தடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான தீர்வாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு எவ்வித பாதகத் தன்மையையும் ஏற்படுத்தாது,

பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி மற்றும் விநியோகத்திற்கான தரப்பினரைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிகள் மற்றும் திருத்தங்கள் அடங்கிய 2022 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க பெற்றோலியப் பொருட்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் தயாரிக்கப்பட்டு அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் படி, உச்ச நீதிமன்றத்தின் சிபார்சுகளுக்கிணங்க 2022 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க பெற்றோலியப் பொருட்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) (திருத்தப்பட்ட) சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆ. நீண்ட கால உடன்படிக்கைகள் அடிப்படையில் இலங்கைக்கான பெற்றோலியப்பொருட்களை இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகம் செய்வதற்காக பெற்றோலியம் உற்பத்தி செய்யும் நாடுகளில் நிலையாக நிறுவப்பட்டுள்ள புகழ்பெற்ற நிறுவனங்களை தெரிவுசெய்தல்

2022 ஆம் ஆண்டில் நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பாரிய அந்நியச் செலாவணி பிரச்சினைகள் தற்போதும் தொடர்ந்த வண்ணமுள்ளன. இதனால் எரிபொருளை இறக்குமதி செய்தல் என்பது மிகுந்த சவால்மிக்கதொன்றாக மாறியுள்ளது. மேலும், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பினி (LIOC) ஆகிய இரு நிறுவனங்கள் மட்டுமே பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்யும் செய்யும் முன்னெடுப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந் நிறுவனங்கள் தங்களது வெளிநாட்டு நாணய பரிமாற்றத்திற்கான உள்நாட்டு வங்கிகளையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. இதனால் அந்நியச் செலாவணி நெருக்கடிகள் காரணமாக, மேற்கூறப்பட்ட இறக்குமதியாளர்கள் குறித்த நேரத்தில் வெளிநாட்டு நாணயத்தை வழங்குவதற்கு தவறுவதால் எரிபொருள் சந்தையில் தொடர்ச்சியான எரிபொருள் வழங்கலை உறுதிசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது மக்களின் வாழ்க்கைக்கு பாதமாக அமைந்துள்ளதுடன் பொருளாதார நிலைபேறான தன்மையையும் பாதித்துள்ளது.

அந்நியச் செலாவணி நெருக்கடியின் காரணமாக CPC மற்றும் LIOC ஆகியவற்றால் தொடர்ந்து எரிபொருளை வழங்குவதளை உறுதிசெய்யமுடியாது போனதால், இந் நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பைப் பயன்படுத்தாது, பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் விற்பனை செய்வதற்குமான வாய்ப்புகளை வழங்குவதற்காக புகழ்பெற்ற நிறுவனங்களிடமிருந்து 2022.07.25 ஆம் திகதி அன்று ஆர்வங்களை வெளிப்படுத்துவதற்கான (EOI) கேள்வி மனு கோரப்பட்டது. பெறுகை விதிமுறைகளை பின்பற்றி அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவால் ஒப்பந்த பேரம்பேசலுக்கு பின்வரும் மூன்று நிறுவனங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

- எம்/ எஸ் சைனோபக் ப்யோல் ஒயில் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் (M/s Sinopec Fuel Oil Lanka (Private) Limited)
- எம்/ எஸ் யுனைட்டெட் பெற்றோலியம் பிரைவேட் லிமிட்டெட் (M/s United Petroleum Pty Ltd)
- எம்/ எஸ் ஆர். எம். பாக் இன் (M/s R.M. Parks. Inc.)


இ. செலவினங்களை அறிமுகம் செய்தல் – மீளப் பெற்றுக்கொள்ளுதல் அடிப்படையிலான சில்லறை எரிபொருள் விலை திருத்த பொறிமுறை

பல்வேறு சந்தர்ப்பங்களில், பொதுமக்களுக்கு பொருளாதார ரீதியாக நிவாரணம் வழங்கும் நோக்குடன், செலவின பெறுமதியினை விட குறைந்த விலையில் பெற்றோலியப் பொருட்கள் உள்நாட்டில் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பணப்புழக்கம்

பாரியளவில் வீழ்ச்சியடைந்ததுடன், அதன் கடன் சுமையும் அதிகரித்துள்ளது. இவ் நிதி அழுத்தத்தை நிவர்த்தி செய்யும் வகையில், 2022 யூன் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வெளிப்படையான செலவினத்தை பிரதிபலிக்கும் வகையிலான எரிபொருள் விலை நிர்ணய பொறிமுறையை அறிமுகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.


இதற்கிணங்க, 2022 யூன் முதல் எரிபொருள் விலைகள் விலை பொறிமுறையின் செலவின மதிப்பீட்டின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. எரிபொருள் விலை பொறிமுறையை அறிமுகப்படுத்துவதற்கு முன்பும் பினபும் உள்ள எரிபொருள் விலைகளால் உள்ள வேறுபாட்டை தெளிவாக வரைபடம் 2.8 காட்டுகிறது. எரிபொருள் விலை பொறிமுறையை அறிமுகப்படுத்திய பின்னர், பெற்றோல் மற்றும் டீசல் விற்பனையின் போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபத்தில் ஏற்பட்ட தாக்கத்தினை அட்டவணை 2.7 காட்டுகின்றது.

வரைபு 2.8
பெற்றோலியப் பொருட்களின் விற்பனை விலை திருத்தங்கள்
(2021 யூன் – 2023 மார்ச் 31 ஆம் திகதி வரை)



மூலம்: மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு

வரைபு 2.9
சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் மாதாந்த பிளட் விலைகள்
(2022 ஜனவரி – 2023 மார்ச் வரை)



மூலம்: மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு

அட்டவணை 2.7

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபத்தில் பெற்றோல் மற்றும் டீசலின் தாக்கங்கள்

மாதம்	CPC இன் செயற்பாட்டு இலாபம் (ரூ.மில்லியன்)	செயற்பாட்டு இலாபத்திற்கு பெற்றோல் மற்றும் டீசல் வழங்கிய பங்களிப்புக்கள் (ரூ.மில்லியன்)	CPC இன் மொத்த நிகர இலாபம் (ரூ.மில்லியன்)
2022 யூன்	7,425	430	(679)
2022 யூலை	9,974	5,137	6,314
2022 ஆகஸ்ட்	9,569	7,721	1,776
2022 செப்ரெம்பர்	16,342	12,787	5,629
2022 ஒக்ரோபர்	10,910	8,859	1,963
2022 நவம்பர்	13,872	12,418	5,310
2022 டிசம்பர்	4,749	6,561	3,932
2023 ஜனவரி	10,134	7,654	3,865
2023 பெப்ரவரி	12,508	10,851	9,434

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

குறிப்பு: மேலே உள்ள அட்டவணையில் கூறப்பட்ட விபரங்கள் மாதாந்த முகாமைத்துவ கணக்குகளிலிருந்தும் மற்றும் டிசம்பர் மாதத் தொகைகள் ஆண்டு இறுதிச் திருத்தங்களில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டவை ஆகும்.

ஈ. தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்தை அறிமுகம் செய்தல்

நாட்டின் சக்திவளப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக 2022 ஆம் ஆண்டு முதல் கையிருப்பில் உள்ள வரையறுக்கப்பட்ட எரிபொருளின் விநியோகத்தை கட்டுப்படுத்துவதற்காக தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கிணங்க, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனியால் பொதுமக்களுக்கு எரிபொருள் சிறந்த முறையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இந் நாட்டின் மூன்று முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களான, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA), மிலேனியம் ஐரிஈஎஸ் பிரைவேட் லிமிட்டெட் (Millenium ITES Private Company) மற்றும் டயலோக் அசிட்டா பிரைவேட் லிமிட்டெட் (Dialog Asiata Private Company) ஆகியவை தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கான தொழில்நுட்ப பங்களிப்புகளைச் செய்துள்ளன.

பெரும்பாக -பொருளாதார காரணிகள் நிலையான தன்மையை அடையும் வரை மற்றும் குறிப்பாக நாட்டின் சென்மதிநிலுவை நிலைபேறான நிலையை அடையும் வரையும் QR முறையை ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக கடைப்பிடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, 2023 ஆம் ஆண்டில், வலுசக்தித் தொழிற்துறைக்கு முன்மொழியப்பட்ட கட்டமைப்பு மாற்றங்களைச் செயற்படுத்தியதன் பின்னர், அதன் விளைவுகளின் அடிப்படையில் கொள்கையை மாற்ற அரசாங்கம் தீர்மானங்கள் எடுக்கப்படும் வரை, எந்தவித விலகலும் இல்லாமல் QR முறை தொடர்ச்சியாக கடைப்பிடிக்கப்படும்.

அட்டவணை 2.8
தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறையின் எரிபொருள் நிரப்பு நிலைய பரிமாற்றல் சாராம்சம் 2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி – 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரை

வழங்குனர்	எரிபொருள் நிரப்பு நிலையங்-களின் எண்ணிக்கை	பரிமாற்றங்கள்	நுகரப்பட்ட தொகை (லீற்றர்)
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC)	1,059	105,452,090	675,784,365
லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC)	207	19,083,631	135,168,909
மொத்தம்	**1,266**	**124,535,721**	**810,953,274**

மூலம்: இவங்கை தகவல் மற்றும் தொடர்பு தொழிநுட்ப முகவர் (ICTA)

அட்டவணை 2.9
வாகனங்களுக்கு வழங்கப்பட்ட தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர முறையின் முன்னேற்றங்கள்

2022 ஆகஸ்ட் 01 ஆம் திகதி – 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரை

வாகன வகை	பதிவுசெய்ய-ப்பட்ட வாகனங்-களின் எண்ணிக்கை	பரிமாற்றங்கள்	நுகரப்பட்ட தொகை (லீற்றர்)
முச்சக்கர வண்டி	1,070,596	24,213,143	81,692,874
உந்துருளி	3,715,316	68,590,175	205,907,394
பேருந்து	58,877	1,294,289	48,832,988
மகிழுந்து	752,934	16,674,711	190,762,241
தரை வாகனங்கள்	63,278	392,409	4,128,653
பார ஊர்தி	330,320	7,028,252	187,598,270
நாற்சக்கர வண்டி	1,584	24,458	84,216
விசேட நோக்க வாகனங்கள்	97,261	87,339	19,390,232
வான்	329,93	5,330,945	72,556,406

மூலம்: இவங்கை தகவல் மற்றும் தொடர்பு தொழிநுட்ப முகவர் (ICTA)

2.11 உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்கள்

அ. திருகோணமலை தாங்கி பண்ணை தொகுதியின் அபிவிருத்தி

திருகோணமலை சீனக்குடா மேல்நிலைத் தாங்கிப் பண்ணை தொடர்பான நீண்ட காலப் பிரச்சினைக்குப் பின்னர், "சீனக்குடா எண்ணெய் தாங்கிப் பண்ணையை உடைமையாக்குதல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள்" என்ற ஒப்பந்தம் 2022 ஜனவரி 06 ஆம் திகதி நிதி அமைச்சு, CPC, மற்றும் LIOC ஆகியவற்றிற்கிடையில் கைச்சாத்திடப்பட்டது. இதன் பயனாக, புதிதாக டிரின்கோ பெட்ரோலியம் டெர்மினல் (பிரைவேட்) லிமிடெட் (TPTL) உருவாக்கப்பட்டுள்ளது.

பின்வரும் தரப்பினரால் சீனக்குடா எண்ணெய் தாங்கிப் பண்ணையை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அட்டவணை 2.10
திருகோணமலை எண்ணெய் தாங்கிப் பண்ணையின் அபிவிருத்திகள்

நிறுவனம்	தாங்கிகளின் எண்ணிக்கை	இடம்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்(CPC)	24	மேல்நிலை தாங்கி
லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC)	14	கீழ் நிலை தாங்கி
வரையறுக்கப்பட்ட திருகோணமலை பெற்றோலிய முனையம் (TPTL)	61	மேல்நிலை தாங்கி

மூலம்: மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு

2022 ஆம் ஆண்டில், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேல்நிலை தாங்கிப் பண்ணையில் 24 தாங்கிகளை நிறுவுவதற்காக பெறுகை வழிகாட்டியினை பின்பற்றி ஒப்பந்தக்காரரை தெரிவுசெய்வதற்காக ஆரம்ப கட்ட நடவடிக்கையாக நிலத்தினை துப்பரவு செய்தல் மற்றும் நில அளவீடுகளை மேற்கொள்ளுதல் போன்ற பல பெறுகை செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான

அபிவிருத்தி திட்டமொன்றினை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தயாரித்துள்ளது.

ஆ. கட்டுநாயக்க விமான நிலையத்தில் எரிபொருள் ஹைட்ரஜன் முறையை (Fuel Hydrant System) அபிவிருத்தி செய்தல்

சர்வதேச தரத்திற்கு ஏற்ப எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்யும் பொருட்டு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஜெட் A-1 விமான எரிபொருள் களஞ்சியத் திறனை விரிவுபடுத்துவதற்கும் மற்றும் எரிபொருள் விநியோகத் திறனை அதிகரிப்பதற்கும், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாம் கட்டத்தின் 2 ஆம் நிலை அபிவிருத்தித் திட்டத்திற்கு இணையாக இத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இத் திட்டத்தின் அபிவிருத்தி பணிகளை முன்யெடுப்பதற்காக,வரியற்ற தொகையான USD 51.5 மில்லியன் பெறுமதியில் இவ் ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது, இத் திட்ட நிதியுதவியின் ஒப்பந்த மதிப்பில் 85% சீனாவின் National Chemical Engineering Construction company இன் சுயநிதியிடல் வசதிகளால் ஈடுசெய்யப்படும். மிகுதி 15% மக்கள் வங்கியின் கடன் வசதிகளால் மேற்கொள்ளப்படும். 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு இத் திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 75.6% ஐ எட்டியுள்ளதுடன் இதன் நிதியியல் முன்னேற்றம் 69.7% ஆக இருந்தது. இத் திட்டத்தின் அபிவிருத்திப் பணிகளை 2023.05.31ஆம் திகதிக்குள் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இ. மீள வாயுவாக்கப்பட்ட திரவ இயற்கை வாயுவை (R-LNG) கொண்டு செல்வதற்கான குழாய் தொகுதியை நிர்மாணித்தல்

"நிர்மாணித்தல், உரிமப்படுத்துல், இயக்குதல் மற்றும் பரிமாற்றுதல் (BOOT) அடிப்படையில் கெரவலபிட்டிய கரையோரப் பகுதிக்கு அப்பால் உள்ள 5 கி.மீ க்கு அப்பால் அமைந்துள்ள மிதக்கும் மீளவாயுவாக்கல் களஞ்சியத் தொகுதி (FSRU) மற்றும் கெரவலபிட்டிய மின்சார நிலையம் வரையிலான மீள வாயுவாக்கப்பட்ட திரவ இயற்கை வாயு (R-LNG) குழாய் தொகுதியை நிர்மாணித்தல்" தொடர்பான B/12/2021 ஆம் இலக்கமிடப்பட்ட கேள்விமனுவானது FSRU மற்றும் நங்கூரமிடல் முறைமையை நிர்மாணிப்பற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் (CPC) இலங்கை மின்சார சபையும் (CEB) இணைந்து கோரப்பட்டுள்ளது.

திட்டத்தின் தற்போதைய நிலை

i. குறும்பட்டியலிடப்பட்ட திட்ட முயற்சியாளருடனான பேரம்பேசல்கள் ஆரம்ப நிலையில் உள்ளன. குழாய்த்தொகுதி முறைமை உடன்படிக்கை (PSA) தொடர்பான CANC தீர்மானத்தை இறுதிநிலைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன் இதன் பின்பு கௌரவ. சட்டமா அதிபரின் சம்மதத்திற்காக சமர்ப்பிக்கப்படும். குழாய்த்தொகுதி முறைமை அமுல்படுத்தல் உடன்படிக்கை (PSIA) 2022.09.29 ஆம் திகதி திறைசேரிக்கு சமர்ப்பிக்ப்பட்டுள்ளது.

ii. பங்குதாரர்களின் பங்களிப்புக்கள் செயற்பாட்டு நிலையில் உள்ளன.

iii. நிதி அமைச்சின் கீழ் வரும் தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தின் 2022.04.26 ஆம் திகதியிடப்பட்ட 03/2022 ஆம் இலக்கமிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் அரச முயற்சிகள் திணைக்களத்தின் 04/2022 ஆம் இலக்கமிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் காணி கையகப்படுத்தல் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. எனினும், காணி கையகப்படுத்தல் செயற்பாடுகளை தொடர்வதற்கு நிதி அமைச்சிடம் 2022.09.27 ஆம் திகதி ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

iv. கேள்விமனுவின் செல்லுபடியாகும் காலம் 2023.12.25 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டது எனினும் கேள்விமனு பிணை உத்தரவாதத்தின் செல்லுபடியாகும் காலத்தை 2024.01.25 ஆம் திகதி வரை நீட்டிப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஈ. கொலன்னாவை முனையத்தில் 93000 கன மீற்றர் கொள்ளளவு கொண்ட 09 மொத்த எரிபொருள் களஞ்சிய தாங்கிகளை நிர்மாணித்தல்

பொதுவாக வருடாந்தம் பெற்றோலியப் பொருட்களுக்கான கேள்வி 5% அதிகரிப்பதனால், இந் நிலைமைகளை எதிர்கொள்ளும் வகையில் ஒவ்வொரு பெற்றோலியப் பொருட்களுக்குமான மொத்தக கையிருப்பு களஞ்சியத் திறனையும் அதிகரித்தல் வேண்டும். பெற்றோலியப் பொருட்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகிதல் போன்றன வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் தலையாய கடமைகளில் ஒன்றாகும். இதனைக் கருத்தில் கொண்டு கொலன்னாவை முனையத்தில் 09 களஞ்சியத் தாங்கிகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இச் செயற்பாடுகள், 64,000 கன மீற்றர் கொள்ளளவு கொண்ட 06 தாங்கிகளை அமைத்தல் மற்றும் 29,000 கன மீற்றர் கொள்ளளவு கொண்ட 03 தாங்கிகளை அமைத்தல் ஆகிய இரு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

06 எரிபொருள் தாங்கிகளை நிர்மாணிப்பதற்கான திட்டம் 2019.10.24 ஆம் திகதி அன்று ரூ.2,286.8 மில்லியன் வரியற்ற ஒப்பந்தத் தொகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டக் காலம் 40 மாதங்கள் ஆகும். ஒப்பந்ததாரரின் மந்தகரமான செயற்பாடுகள் காரணமாக இவ் ஒப்பந்தத்தை மேலும் தொடர முடியாது 2022.01.19 ஆம் திகதி அன்று இவ் ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது. இவ் ஒப்பந்தத்தை நிறுத்துவதற்கு எதிராக ஒப்பந்ததாரர் இடைக்காலத் தடையுத்தரவு பெற்றுள்ளார், மேலும், இத் தாங்கி நிர்மாணப் பணிகளின் பௌதீக முன்னேற்றம் 18% ஆகும். மேலும், 03 எரிபொருள் தாங்கிகளை நிர்மாணிப்பதற்கான திட்டம் 2020.11.12 ஆம் திகதி அன்று ரூ.942.5 மில்லியன் வரியற்ற ஒப்பந்தத் தொகைக்கு வழங்கப்பட்டது. இத் திட்டக் காலம் 20 மாதங்கள் ஆகும். தற்போது, இவ் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

உ. கொலன்னாவை முனையத்தில் எண்ணெய் களஞ்சியத் தாங்கியை புனரமைத்தல்

புதிய தொழில்நுட்பம் மற்றும் தரநிலைகளை பின்பற்றி, தற்போதுள்ள தாங்கிப் பண்ணையை பராமரிக்குமுகமாக திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு இதன் முன்னேற்றங்கள் அட்டவணை 2.11 இல் தரப்பட்டுள்ளது.







அட்டவணை 2.11
தாங்கி திருத்தப்பணிகளின் முன்னேற்றங்கள்
(2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு)

தாங்கி இல.	களஞ்சியத் திறன் (கன மீற்றர்)	மதிப்பீடு செய்ப்பட்ட தொகை (வரி இல்லாது)	2022.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு தற்போதைய பௌதீக முன்னேற்றம்
03	12,500	ரூ. 40 மில்லியன்	100%
17	4,936	ரூ. 30 மில்லியன் + USD 35,400	100%
22	2,790		100%
46	11,856	Rs. 133 மில்லியன்	100%

மூலம்: இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம்

ஊ. கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொலன்னாவ முனையம் வரை செல்லும் 14 அங்குல விட்டம் கொண்ட குழாய் பாதையை புனரமைத்தல்

தற்போது எரிபொருள் பரிமாற்றலுக்காக உபயோகப்படுத்தப்படும் குழாய் மிகவும் பழமையானதுடன் பழுதடைந்தும் காணப்படுகின்றது. இதற்கிணங்க, 5,750 மீற்றர் நீளமான குழாயை பழுதுபார்க்கும் பணிகள் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டத்திற்காக இலங்கை பெற்றோலியக் களஞ்சிய முனையம் ரூ.95 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளதுடன் 2022.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு இதன் பௌதீக முன்னேற்றம் 70% மாகக் காணப்பட்டது. இத் திட்டத்தின் மிகுதி பணிகள் 2023.05.30 ஆம் திகதியளவில் பூர்த்திசெய்யப்படும்.

2.12 பெற்றோலிய இறக்குமதிகள், சுத்திகரித்தல் மற்றும் விற்பனைகளின் முன்னேற்றங்கள்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, சுத்திகரிப்பு மற்றும் விநியோக செயற்பாடுகள் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். நுகர்வோர் திருப்தியை அதிகரிக்கும் வகையில் தரம் மற்றும் புதுமையான தயாரிப்புகளை இறக்குமதி செய்வதைலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எப்போதும் உறுதி செய்கின்றது.

அ. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரித்த பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிகள்

நாட்டில் நிலவிய கோவிட் 19 தொற்றுநோய் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை மசகு எண்ணெய் இறக்குமதி குறைவடைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டின் மசகு எண்ணெய் இறக்குமதி தொகையுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் மசகு எண்ணெய் இறக்குமதி 34% மாகக் குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டில் மசகு எண்ணெயின் இறக்குமதி செலவினம் 78% மாக அதிகரித்துள்ளது. 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான மசகு எண்ணெய் இறக்குமதியின் விவரங்களைக் அட்டவணை 2.12 உம் மற்றும் 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி விவரங்களைக் அட்டவணை 2.13 உம் காட்டுகிறது.

அட்டவணை 2.12
இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெய்
(2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை)

ஆண்டு	தொகை (மெ. தொ.'000)	இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெயின் பெறுமதி (DAP) (ரூ. மில்லியன்)
2018	1,763	160,933
2019	1,843	172,542
2020	1,666	98,277
2021	1,130	101,306
2022	743	180,019

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

அட்டவணை 2.13
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரித்த பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிகள்
(2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை)

உற்த்தி வகை	தொகை (மெ.தொ) ('000)		
	2020	2021	2022
ஓட்டோ டீசல்	951	1,254	1,267
சுப்பர் டீசல்	56	68	128
பெற்றோல் 92 ஒக்டேன்	837	893	888
பெற்றோல் 95 ஒக்டேன்	91	103	46
ஜெட் யு-1	101	178	269
குறை சல்பர் உலை எண்ணெய் (180 CST)	206	245	124
ஊயர் சல்பர் உலை எண்ணெய் (180 CST)	146	31	-
மொத்தம்	**2,388**	**2,772**	**2,722**

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

ஆ. 2022 ஆம் ஆண்டின் சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகள்

2022 ஆம் ஆண்டில், சுத்திகரிப்பு நிலையத்தின் ஊடாக 1,855,000 மெற்றிக் தொன் மேபன் மசகு எண்ணெய் மூலம் உற்பத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பயனாக, 2022 ஆம் ஆண்டில் 529,773 மெற்றிக் தொன் மசகு எண்ணெயை உபயோகித்து மொத்தம் 482,875 மெற்றிக் தொன் பெற்றோலியம் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், நாடு எதிர்நோக்கியுள்ள நிதி நெருக்கடிகள் காரணமாக மேபன் மசகு எண்ணெய், யூரல் (Urals) மசகு எண்ணெய், சைபீரியன் (Siberian) இலகு மசகு எண்ணெய் மற்றும் எஸ்போ (Espo) மசகு எண்ணெய் ஆகியவற்றின் கலவைகள் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டுள்ளன. சுத்திகரிப்பு நிலையத்தின் எதிர்வுகூறப்பட்ட மற்றும் உண்மையான திறன்களின் செயற்பாடுகளை அட்டவணை 2.14 காட்டுகிறது.

அட்டவணை 2.14
2022 ஆம் ஆண்டின் சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தின் எரிபொருள் உற்பத்திகள்

உள்ளீடு	அலகு	2022 மசகு எண்ணெய் திறன்	
		உத்தேச (மேபன்)**	உண்மையானது *
மசகு எண்ணெய்	மெ.தொ	1,855,000	529,773
தூர் உற்த்திக்கான HSFO	மெ.தொ	87,500	0
உற்பத்திகள்			
சுப்பர் பெற்றோல்/ பெற்றோல்	மெ.தொ	187,790	38,666
மண்ணெண்ணெய்	மெ.தொ	66,780	25,289
நெப்தா	மெ.தொ	158,044	30,835
டீசல்	மெ.தொ	608,253	128,165
அவ்தூர் (Avtur)	மெ.தொ	267,120	57,346
உலை எண்ணெய் 800செக்	மெ.தொ	485,100	87,196
உலை எண்ணெய் 1500 செக்	மெ.தொ		107,001
திரவ பெற்றோலிய எரிவாயு	மெ.தொ	25,200	5,687
சோல்வன்ட் (SBP)	மெ.தொ	1,404	2,690
தார்	மெ.தொ	39,550	0
மொத்த உற்பத்தி	மெ.தொ	**1,839,241**	**482,875**

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

அட்டவணை 2.15
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தான
சுத்திகரிப்பு நிலையத்தின் எரிபொருள் உற்பத்திகள்
(2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை)
(மெ.தொ)

ஆண்டு		2,018	2019	2020	2021	2022
மசகு எண்ணெய் உள்ளீடு		1,703,307	1,902,357	1,685,441	1,272,207	529,773
வெளியீடு	பெற்றோல்	165,425	185,915	164,416	124,092	38,666
	ஓட்டோ டீசல்	567,577	624,462	537,645	370,594	128,165
	உலை எண்ணெய் 800செக்	423,197	468,843	465,419	359,021	87,196
	உலை எண்ணெய் 1500 செக்	-	-	-	-	107,001
	மண்ணெண்ணெய்	35,195	8369	109,165	98,284	25,289
	இரசாயன நெப்தா	140,619	162,019	156,953	106,956	30,835
	தார்	12,839	17,103	13,561	6,879	-
	திரவ பெற்றோலிய எரிவாயு	22,084	26,988	25,251	16,650	5,687
	ஜேட் A–1	237,270	258,986	157,279	130,572	57,346
	சோல்வன்ட்(SBP)	1,596	1,660	897	3,037	2,690
மொத்த வெளியீடு		1,605,802	1,754,345	1,630,586	1,216,085	482,875

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

இ. பெற்றோலியப் பொருட்களின் விற்பனைகள்

வெவ்வேறு பெற்றோலியப் பொருட்களுக்கான கேள்விகள் பிரதானமாக அவற்றின் சாத்தியமான பயன்பாட்டைப் பொறுத்து வேறுபடும். உதாரணமாக, ஓட்டோ டீசல், போக்குவரத்து மற்றும் மினசார உற்பத்திக்கு பரவலாகப் பயன்படுத்தப்படுத்தப்படுகிறது. மாறாக மண்ணெண்ணெய், கிராமிய வீட்டு வக்திவளத் தேவைகள், சில தொழிற்துறை பயன்பாடுகள், விவசாயம் மற்றும் மீனபிடி தேவைகள் போன்றவற்றிற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. எனவே, மண்ணெண்ணெய்யை விட ஓட்டோ டீசலின் தேவை கணிசமாக அதிகமாக உள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான மொத்த எரிபொருள் விற்பனை விவரங்கள் அட்டவணை 2.16 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.16

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நாடுபூராகவும் விற்பனை செய்துள்ள பெற்றோலியப் பொருட்கள் – 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை

உற்பத்தி வகைகள	மொத்த விற்பனை (மெ.தொ)			
	2019	2020	2021	2022
லங்கா பெற்றோல் 92 ஒக்டேன்	1,184,944	1,005,013	1,102,551.7	964844.219
லங்கா பெற்றோல் 95 ஒக்டேன்	135,747	99,950	102,809.5	55697.245
லங்கா ஓட்டோ டீசல்			1,706,041.8	1475577.154
லங்கா சுப்பர் டீசல்	67,373	57,413	65,721.5	72474.383
லங்கா மண்ணெண்ணெய்	202,809	171,441	185,312.6	98367.966
லங்கா கைத்தொழில் மண்ணெண்ணெய்	3,324	1,902	2,903.3	5647.035
லங்கா இரசாயன நெப்தா	124,596	1,590,582	333,459.2	32262.861
லங்கா உலை எண்ணெய் 800 செக்		-	99,321.8	-
லங்கா உலை எண்ணெய் 1500 செக் (உயர் சல்பர்)	171,099	203,251	340,198.0	198891.936
லங்கா உலை எண்ணெய் 1500 செக் (குறை சல்பர்))	99,779	30,246	407,868.4	103379.876
லங்கா சுப்பர் உலை எண்ணெய்	472,876	591,162	203,994.2	54978.319
ஜெட் A-1	473,458	188,618	223,666.3	245796.923
லங்கா சோல்வன்ட (SBP)	1,274	796	2,486.5	2701.635
மொத்தம்	**4,965,822**	**5,502,518**	**4,776,334.80**	**3,310,619.55**

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

2.13 பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயு ஆய்வு தொடர்பான செயற்பாடுகளின் முன்னேற்றங்கள்

இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை (PDASL) 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 8 ஆம் திகதி நிறுவப்பட்டது. 2022 ஆம் ஆண்டு புதிய இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதான ஆண்டாகும். ஏனெனில், இவ் ஆண்டில் இந் நிறுவனம் நிர்வாக, மனித வளங்கள், நிதி மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கும் மற்றும் இலங்கையின் ஹைட்ரோகாபன் ஆய்வுத் துறையை ஒழுங்குபடுத்துவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்ட ஆண்டாக இவ் ஆண்டு உள்ளது. பேற்றோலியம் மற்றும் இயற்கை வாயு ஆய்வு தொடர்பான செயற்பாடுகளில் எட்டப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு.

அ. PDASL மற்றும் அமைச்சும் 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி, ஆய்வுகளில் முதலீட்டை இலகுபடுத்துவதற்குத் தேவையான ஒழுங்குமுறைகளை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் (கூட்டு கற்கை உடன்படிக்கை) விதிமுறைகள் மற்றும் 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க பெற்றோலிய வளங்கள் (சேவை வழங்குநர் அனுமதிப்பத்திரம்)

விதிமுறைகள் ஆகியவை 2022 டிசம்பரில் இறுதி செய்யப்பட்டுள்ளன. மேலும் இரண்டு விதிமுறைகள் அதாவது, 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஹைட்ரோகாபன் ஆய்வு நடவடிக்கைகளுக்கான தரவு உருவாக்கம் தொடர்பான இலங்கையின் ஒழுங்குமுறைகள் மற்றும் 2023 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க தரவு அனுமதிப்பத்திர விதிமுறைகள் ஆகியவை இறுதி செய்யப்படுவதற்கான செயற்பாட்டில் உள்ளன.

ஆ. இலங்கையின் புதுப்பிக்கப்பட்ட ஹைட்ரோகாபன் ஆய்வுத் தொகுதி வரைபடம் 2022 யூலை 11 ஆம் திகதி அன்று வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வெளியிடப்படடுள்ளது. இத் தொகுதி வரைபடம் கிட்டத்தட்ட 15 கிமீ x 15 கிமீ நீளமுள்ள 922 சிறிய தொகுதிகளைக் கொண்ட, (மன்னார் கடற்படுக்கை - துண்டங்கள் (MB001 - MB294), காவிரி கடற்படுக்கை - துண்டங்கள் (CB001 - CB069), லங்கா கடற்படுக்கை- துண்டங்கள (LB501 - LB509) ஆகிய மூன்று படுகைகளையும் உள்ளடக்கியது. இவை கூட்டு கற்கைகள், ஆய்வுகள், அபிவிருத்தி மற்றும் உற்பத்தி செயற்பாடுகளுக்கு வழங்கப்படும்.

இ. Schlumberger மற்றும் Bell Geospace நிறுவனங்கள், பல வாடிக்கையாளர் (multi-client) தரவு செயலாக்கம் மற்றும் மீள் செயலாக்கம், சந்தைப்படுத்தல் மற்றும் தரவு அனுமதிப்பத்திர திட்டங்களைத் தொடர்ந்த வண்ணமுள்ளன. லண்டனில் நடைபெற்ற SEAPEX/PESGB ஆசிய பசுபிக் E&P உச்சி மாநாடு உட்பட பல சர்வதேச மாநாடுகளில் இந் நிறுவனங்கள் இலங்கையின் பல வாடிக்கையாளர் (multi-client) தரவு விளம்பரங்களை ஆரம்பிததுள்ளன.

ஈ. இலங்கையில் மன்னார் மற்றும் காவிரிப் கடற்படுக்கைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் ஹைட்ரோகாபன் இருப்பை மதிப்பீடு செய்யும் நோக்கில் SDDT தொழில்நுட்பத்தின் உதவியுடன் வினைத்திறன் மிக்க மதிப்பீட்டு செயற்பாடுகள் ஜெர்மனியின் Pytheas நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உ. பல வாடிக்கையாளர் (multi-client) தரவு பங்குதாரர்கள் PDASL உடன் மிக நெருக்கமாக பணியாற்றி வருவதுடன், புதிய முதலீட்டாளர்களின் ஆர்வத்தையும் இலங்கைக்கு ஈர்த்துள்ளனர். PDASL ஆனது விற்பனை மூலம் பங்குதாரர்களுக்கான பங்காக USD 683,975.75 ஐ பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி நிதிக்கு பெற்றுள்ளது.

2.14 2022 ஆம் ஆண்டில் எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

பெற்றோலியம் மற்றும் நிலக்கரி கொள்வனவு

